
உவெஸ்லி உயர்தர பாடசாலை

கல்முனை

# கண்ணோட்டம்



க. பொ. த (உ/த)

மாணவர் தின விழா - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவெஸ்லி உயர்தர பாடசாலை
கல்முனை

# கண்ணோட்டம்

க. பொ. த (உ/த)

மாணவர் தின விழா - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி உயர்தர பாடசாலை,

# கல்முனை.

## க. பொ. த (உ/த) மாணவர் தின விழா –2019

காலம்

**25 ஜூலை 2019 முற்பகல் 9.30 மணி**

இடம்

**நல்லதம்பி மண்டபம்**

தலைமை

**திரு. வ. பிரபாகரன்**

(கல்லூரி அதிபர்)

பிரதம அதிதி

**திரு. வே. ஜெகதீசன்**

(மேலதிக அரசாங்க அதிபர் - அம்பாறை)

கௌரவ அதிதிகள்

**திரு. ந. ரமேஷ்**

(வைத்தியக்கலாநிதி ஆதார வைத்தியசாலை - கல்முனை வடக்கு)

**திரு. எஸ். புவநேந்திரன்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)

கல்முனை வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

எந்தையே உம் ஊழியர்
எழுப்பிய கூடம்
உந்தயையாலே பாலர்
உற்றார் ஆசி கிரீடம்
பந்த சித்தியாம் கிருபை
பாதை தன்னில் காணும்
இந்த நேரம் அன்னாரோ
டேத்துவோமும் நாமம்

ஓய்வு அற்று மாறியே
ஓடும் மோன ஆண்டு
தேய்வற்ற புது முக
தோழர் தந்த தீண்டு
மாய்வு தோன்றமறந்தார்
மன்னுந் திடம் பயம்
ஓய்ந்தாலும் மாறா உம்மோ
டொன்றாகிச் சிறந்தார்

நற்றானி யத்தை மன்னோர்
நட்டார் நாம் அறுக்க
பெற்றுப் பின்னோர் விளைவை
பண்ட(க)சாலை சேர்ப்பார்
அற்றை நாள் தரும் பாடம்
உத்தம சேவையாம்
முற்றாய் உயர்ச்சிக்கே எம்
முழு நோக் கன்றாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOTTO

Utmost for the Highest

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி

# VISION

Quality Education, the key to Success
of Future Generation

தரமான கல்வி எதிர்கால சந்ததியின்
வெற்றிக்கான திறவுகோல்

# MISSION

"Pave the way towards inculcation innovation Skills and enhancing Social Economic Development among Students, to become Useful and Patriotic Citizens in keeping with National Education Policy"

"எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு மாணவர்களைத் தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப நாட்டுப்பற்றுள்ள புத்தாக்க திறன்மிக்க, பயன்மிக்க பிரஜைகளாக திகழ வழிசெய்து கொடுத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர தின
# வரவேற்புக் கீதம்

அறியாமை இருள் நீக்கி அறிவு வழிகாட்டும்
மறைஞான மேலோர்கள் அன்புடனே வாரீர்

மெஞ்ஞான வாழ்விற்கு உரிய வழிகாட்டும்
உத்தமர்கள் ஒன்று கூடி வாழ்த்துக் கூற வாரீர்

கல்வியின் கரை தொட கல்விக்கூட வாழ்வில்
கடும் முயற்சி புரிந்த எங்கள் காவலரே வாரீர்
(அறியாமை)

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று நாமும்
உயர்ந்த ஆசீர்வாதம் தந்திடவே வாரீர்

பல்கலைக் கழகம் சென்று பண்புடனே
அகிலம் போற்றும் சீலராக சிறக்க வாழ்த்துத் தாரீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் பல கட்டங்களில் பாடசாலை வாழ்வு என்பது சந்தோஷமானதும், எவ்வித கவலைகளும் அற்றதாகக் காணப்படும். அவ்வாறான நிலையின் இறுதிக்கட்ட உயர்தர பரீட்சைக்காக காத்திருக்கும் உங்களுக்கு ஓய்வு காணும் நிலையில் உள்ள பாடசாலையின் அதிபராக வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

இரு ஆண்டுகளாக உயர்தரத்தில் கழித்து பாடசாலையின் பல் தரப்பட்ட நிகழ்வுகளில் உங்கள் பங்களிப்புகளைச் செய்து பாடசாலையின் செயற்பாடுகள் பலவற்றில் இணைந்த உங்களுக்கு வாழ்த்துக்கள்.

பாடசாலை எனும் நிறுவனத்தில் பிரதான பங்கு வகிக்கும் வாடிக்கையாளர்களான உங்களை திருப்திப்படுத்துவதோடு உங்களின் எதிர்காலம் குறித்த கரிசனை உயர்வு என்பவற்றை மனதிற் கொண்டு செயற்பட்ட பிரதி, உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்களுக்கு எனது நன்றிகள். அவ்வாறே உங்களோடு உணர்விலும், உறவிலும் கற்பித்ததில் ஈடுபட்ட ஆசிரிய பெருந்தகைகளுக்கும் உங்கள் சார்பில் எனது நன்றிகள்.

கடந்த வருட உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக் கழகம் செல்ல அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கும் மாணவர்களுக்கும் அவர்களை ஊக்குவித்த பாடசாலை ஆசிரிய ஆளணியினருக்கும் பெற்றோருக்கும் எனது வாழ்த்துக்கள்.

அதே விதமாக முதலாவது தடவையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காது இரண்டாம் தடவை முயற்சித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் எனது ஆசியினைத் தெரிவிக்கிறேன்.

இன்று பல்கலைக்கழகங்களுக்கு புறம்பாக பல கல்வி நிறுவனங்கள் உள்ளன அவைகளும் உயர்கல்வியை நோக்கி மாணவர்களை அழைத்துச் செல்கின்றன எனவே தோல்விகளை வெற்றிப்படிகளாக்கி வெற்றிபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. V. பிரபாகரன்**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் ஆசிச் செய்தி

கல்முனை மாநகரில் கல்வியின் கலங்கரை விளக்காக நூற்றாண்டுகளையும் கடந்து கல்வி ஒளியூட்டி, வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற கமு / உ வெஸ்லி உயர்தர பாடசாலையின் க. பொ. த (உ/த) மாணவர் தின விழாவின் வெளியீடான "கண்ணோட்டம்" சஞ்சிகையில் ஆசிச்செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமை கொள்கின்றேன்.

கல்விச்சாலைகள் மாணவர்களுக்கான சிறந்த கல்வியை வழங்குவதில் மட்டுமல்ல, நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் ஏற்படுத்தி, பண்பாட்டு விழுமிய கலாசார உணர்வுகளையும் வளர்த்தெடுக்கின்ற பணிகளைச் செய்வதற்கான களமாக விளங்குகின்றன.

நாட்டில் பிறக்கின்ற ஒவ்வொரு பிரஜையும் தேசப்பற்றுள்ள ஒரு குடிமகனாக, நாட்டின் அபிவிருத்தியிலே பங்கு கொள்ளக்கூடிய, இறைமையை கட்டிக்காக்கின்ற ஒரு சிறந்த மனிதனாக மாற்றப்படுவதானது ஒரு சிறந்த கல்விச் செயற்பாடுகளினூடாகவேயாகும். இவ்வாறான நற்காரியத்தை செய்வதிலே எமது கமு/உ வெஸ்லி உயர்தர பாடசாலையும், அதன் தலைமைத்துவங்களும், ஆசிரியப் பெருந்தகைகளும், அது சார்ந்த ஆளணியினரும் தொடர்ச்சியாக மிகவும் சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றனர். இதற்கு சான்று பகர்வதாகவே, இப்பாடசாலையிலிருந்து கல்விச் செயற்பாடுகளை முடிவுறுத்தி வெளியேறிய மாணவர்களில் பெரும்பாலானோர் இன்று தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பரந்து நின்று பல்துறை விற்பன்னர்களாக தமது சேவைகளை வழங்கி வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

எனவே அன்பான மாணவர்களே இவ்வழித்தோன்றல்களின் பாதையில் நீங்களும் பயணித்து இப்பாடசாலையின் பெருமையையும், நன்மதிப்பையும் அதே போன்று அரிவரி தொடங்கி உயர்தரம் வரை கற்பித்த கல்வித் தெய்வங்களான ஆசிரியர்களின் நன்மதிப்பையும், புகழையும் தங்களின் முதற்தெய்வங்களான பெற்றோரின் பெருமையையும் பறைசாற்றுகின்ற வகையில் பல உயர்வுகளையும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு. வேதநாயகம் ஜெகதீசன்**
மேலதிக அரசாங்க அதிபர்
அம்பாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாடசாலையில் கல்வி கற்று 2019 க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ள இந்நிகழ்வின் ஆக்கமாக வெளியிடப்படும் கண்ணோட்டம் என்ற இச்சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

அறியாத வயதில் ஆரம்ப வகுப்பில் அடியெடுத்து வைத்தபோது அன்புடன் அரவணைத்து கடந்த ஓர் தசாப்தத்திற்கும் மேலாக உங்களை சமூகத்தின் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் தயார்ப்படுத்துவதிலும் உங்களின் அறிவு ஆளுமை விருத்தியிலும் உங்களை நற்குணமுடைய தன்னம்பிக்கையுள்ள மனிதர்களாகவும் வளர்த்தெடுக்கப் பாடுபட்ட இப்பாடசாலையும், அதிபர்களும், ஆசிரியர்களும் உங்கள் வாழ்க்கையின் ஓர் அழியா அங்கமாகும். இங்கு நீங்கள் பெற்ற நண்பர்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அனுபவங்களாகும். வாழ்க்கையில் எப்போதும் மறக்கமுடியாத பசுமையான நினைவுகளுடன் மீண்டும் கிடைக்காதா என ஏங்க வைப்பது இப்பாடசாலை வாழ்க்கையே.

வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு செல்லத் தயாராகும் நீங்கள் மேலும் சாதனைகள் செய்து இப்பாடசாலைக்கும், பாடசாலையின் அதிபர்களிற்கும், கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்ப்பதுடன் சமூகத்தில் ஓர் போற்றத்தக்க நற்பிரஜையாக உயர்ந்து உங்கள் பெற்றோருக்கும் உங்கள் ஊரிற்கும் பெருமை சேர்க்க வேண்டும். எல்லோரும் வரும் க. பொ. த உயர்தர பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைய வாழ்த்துகின்றேன்.

**திரு. நடராஜா ரமேஷ்**
வைத்தியக்கலாநிதி ஆதார வைத்தியசாலை - கல்முனை வடக்கு
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ அதிதியின் ஆசிச் செய்தி

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 2019ம் ஆண்டு கல்வி பொது தராதர உயர்தர மாணவர்களின் விடுகை விழாவில் ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மிக நீண்ட வரலாற்றை கொண்ட உவெஸ்லி உயர்தர பாடசாலை அகில இலங்கை அடிப்படையில் அனைத்து விடயங்களிலும் சிறந்து விளங்குவதற்கு இப் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பல மாணவர்களும், தியாக சிந்தனை கொண்ட ஆசிரியர்களும், ஆளுமை மிக்க அதிபர்களும் காரணமாக திகழ்ந்திருக்கின்றனர்.

விசேடமாக உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலையின் கல்வி அடைவிலே மிக அதிகளவான பங்களிப்பினை செய்துள்ளனர். இவ்வாறு இப் பாடசாலைக்கு புகழ் சேர்த்த மாணவர்களை இச் சந்தர்ப்பத்தில் அழைத்து பாராட்டுவது அம் மாணவர்கள் பாடசாலையின் மீது தமது பங்களிப்பினை அதிகரிப்பதுடன் இம்முறை பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக காணப்படுகிறது. தாங்களும் சாதிக்கவேண்டும், பாடசாலை வரலாற்றில் இடம்பெறவேண்டும் எனும் எண்ணத்தை அவர்களின் மனங்களில் விதைப்பதாக காணப்படுகிறது. இதே மேடையில் மாணவர்களால் ஆசிரியர்களும் கௌரவிக்கப்படுவது மாணவர், ஆசிரியர் இடைத்தொடர்பு சிறப்பாக காணப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதுடன் ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளை இம்மாணவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற செய்தியையும் வெளிக்காட்டுகிறது.

எனவே இவ் விழா சிறப்பாக இடம்பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் மாணவர்கள் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு சிறப்பான பெயரை பெற்றுத் தரவேண்டும் என்றும் சமூகத்திற்கு பொருத்தமான மனப்பாங்கினை கொண்ட பிரஜைகளாக வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**திரு. எஸ். புவநேந்திரன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
கல்முனை வலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சிந்தனைகளும் உலகின் நவீன கல்வி முறைகளும் மாற்றமடைந்து கொண்டு செல்லும் இந்தகாலத்தில், சமூகத்தினதும் உலகினதும் தேவைக்கு ஏற்றாற்போல் கல்வி சேவையை 136 வருடங்களைத் தாண்டி வழங்கிக் கொண்டிருக்கும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடலையின் 2019 இல் க. பொ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களால் வெளியிடப்படும் கண்ணோட்டம் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகிறேன்.

அன்பான மாணவர்களே 13 வருடங்கள் ஓய்வு ஒழிவின்றி நீங்கள் கற்ற கல்வியை பரீட்சிப்பது உயர் கல்வி ஆகும். அதிலும் பல்கலைக்கழக கல்விக்காக பொதுப்பரீட்சை எழுத காத்துக் கொண்டு இருக்கும் நீங்கள் சிறந்த பெறுபேறு பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன். இலங்கையில் வாழும் உங்களைப்போன்ற ஒவ்வொரு மாணவருடனும் அறிவு ரீதியாக அல்லது கற்றல் ரீதியாக போட்டிபோடுவதோடு உங்களின் எதிர்காலம் இதிலே அடங்கியுள்ளது என்பதை மறவாதீர்கள். மட்டுமன்றி சிறந்த அறிவையும், நல்விழுமியங்களையும் பெற்ற நீங்கள் சமூகத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பமும் புதிது புதிதானதாகவே இருக்கும்.

சான்றோர்களைப் போல சமயோசிதமாக நடந்து கொள்வதன் மூலமே வாழ்வில் சவால்களில் இருந்து விடுபடுவீர்கள் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் பெற்ற கல்வி அறிவும் உங்கள் அனுபவங்களும் கை கொடுக்கும் இதற்கேற்றாற்போல் உங்களை தயார்படுத்திக் கொள்ளுமாறு கேட்பதுடன் இப்பரீட்சையிலே சிறந்த பெறுபேறுகளைப் பெற உங்கள் பெற்றோர்களோடு நாங்களும் எதிர்பார்த்து வாழ்த்துகிறோம். அத்துடன் இம்மாணவர்களுக்கு ஒவ்வொரு காலங்களிலும் கல்வியூட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

*நன்றி*

**திரு. செல்லத்தம்பி கலையரசன்**
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of Greetings

**Reverence for the lord is an education in itself. You must be humble before you can ever receive honours.**

I love you all and greet each of you on the impressive gathering to mark the GCE (A/L) day 2019. As you all know, the great impact especially on education and the discipline of secondary and collegiate level students of North and East is addiction of Drugs. As a result, the upcoming of the adolescence in the region becomes a countless challenge and trial at present.

Though science and technology arrives at the top of the finger, the applied knowledge of it is very low among younger generation. Besides, the students of GCE (O/L) and GCE (A/L) indicate reluctance to appear common exams until they pass. Commonly they appear exams only at once and a very few sit more than once to be qualified for the **Universities or Open Universities or Technical and Higher Technical Colleges and Colleges of Education**. It is a common trend among teenagers. Remember, the institutions are open for you for variety of courses at any time.

Meanwhile, some **buys certificates for money at high rate from the private educational institutions** soon after the GCE (O/L) and GCE (A/L) **without knowing the value of government certificates.** In fact there are ample occasions for the employment in inland or overseas or in the private institutions for the government certificates. **Foreign employment bureau values government certificates and offer openings to the youths to obtain employment abroad in Korea, Japan, Malaysia, Middle-East and China on very high pay.**

So dear children, be vigilant and capture augmented life in the future. The 136th year antique body provided perky footing to each of you for the hearings that you are to face. By the time I acknowledge the Teachers, Sectional Heads and the School Society for their back up time to time.

May the **Mission of ' WESLEY '** be with you all !

**Mr. S. Devachandra**
( Deputy Principal )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் A/L தின நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்படும் கண்ணோட்டம் சஞ்சிகையில் மாணவராகிய உங்களுக்கு ஆசி உரை வழங்குவதில் பெருமை அடைகிறேன்.

ஆயிரக்கணக்கான மாணவர்களை அலங்கரித்து வழியனுப்பிய உவெஸ்லி உயர்தர பாடசாலையின் A/L தின நிகழ்வு மகிழ்ச்சிக்குரியதாகும். இந்தத்தினத்திலே பொன்மலர்ச் செல்வங்களாக மிளிர்ந்து நிற்கும் உங்களை அன்புடன் பாராட்டுகிறேன்.

அன்புள்ள மணவர்களே ஆண்டாண்டு காலமாக உயர் கல்வி கற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்த ஒவ்வொரு மாணவரும் போற்றப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் இன்றைய கண்டோட்டத்தில் எழில்மிகு செல்வங்களாக நீங்கள் விளங்குவதை நான் பாராட்டுகிறேன். அத்தோடு உங்களுடைய எதிர் காலம் சிறப்பதற்கு இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நல்ல உள்ளம் படைத்தவர்களாக ஈழத்திருநாட்டில் எழில் கொஞ்சும் சிட்டுக்களாய் வலம் வருவீர்கள் என்ற நம்பிக்கை என்னிடம் உண்டு. இருந்தபோதிலும் வழிகாட்டிய இப்பாடசாலையை மறக்கமுடியாத ஒன்றாக நீங்கள் கருதவேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். மாணவர்களே மகத்தான உங்கள் வாழ்வு கல்வியோடு கரைபுரண்டு ஓட என்னுடைய பிரார்த்தனைகள் எப்பொழுதும் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள். மறக்க முடியாதவர்களாக, மறுக்கமுடியாதவர்களாக எங்கள் இதயத்தில் நிலைத்து நிற்க உங்களை ஆசீர்வதிக்கின்றேன். அன்புக்குரியவர்களே அகரத்தமிழை ஆயுள் மூச்சாய் நுகரச் செய்யுங்கள், என்று கூறி ஆசி வழங்குவதில் பெருமிதத்தோடு விடைபெறுகின்றேன்.

***திரு. சி. சிவாகரன்***
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி அதிபரின் ஆசிச் செய்தி

கல்முனை மாநகரில் ஆலமரநிழலில் அமைதியாக அமர்ந்து கொண்டு மாணவர்களிடத்தில் பல்வேறு ஆற்றல்களையும், திறன்களையும் வளர்த்துக் கொண்டிருக்கும் கமு / உ வெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்று இம்முறை க. பொ. த (உ / த) பரீட்சையினை எழுத இருக்கும் மாணவர்களினால் வெளிடப்படும் கண்ணோட்டம் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பரீட்சையானது 1-13 ஆண்டுகள் வரை கல்வி கற்ற உங்களின் தலைவிதியினை தீர்மானிக்கும் பரீட்சை என்றால் மிகையாகாது. உங்களுடைய கனவுகள், இலட்சியங்களை உள்ளடக்கிய ஒரு பரீட்சையாக இப்பரீட்சை அமைவதனை கருத்தில் கொண்டு மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய முழுக் கவனத்தையும் பரீட்சையின் மீது செலுத்தி எந்தவித பயமோ, பதற்றமோ இல்லாமல் ஒழுங்கான முறையில் பரீட்சையினை எதிர்கொண்டு சிறந்த பெறுபேறுகளை பெற்று உங்களுடைய கல்வி பயணத்தினை தொடர்வதுடன் உங்களுடைய எதிர்காலமும் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. P. கமலதாசன்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136வருட கால வரலாற்றுடன் கல்முனை நகரின் மத்தியில் நிமிர்ந்து நிற்கும் எமது பாடசாலையில் க. பொ. த. உயர்தர மாணவர்களினால் வெளியிடப்படும் "கண்ணோட்டம்" என்ற சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

க. பொ. த. உயர்தர பரீட்சை என்பது உயர்தரம் கற்கும் மாணவருக்கு முக்கியமானதொரு தடை தாண்டல் ஆகும் அதிலும் உயர் பெறுபேறுகள் பெற்று பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்று உயர் பதவிகள் பெறுவது என்பது ஒவ்வொரு மாணவரிடமும் உள்ள கனவு. அதை நனவாக்கும் முயற்சியில் பாடசாலையும், ஆசிரிய சமூகமும், பெற்றோரும் தங்களினாலான முழுப்பங்களிப்பையும் வழங்குகின்ற அதே வேளையில், கற்கும் மாணவர்களின் விடாமுயற்சியும், சுயகற்றலும், பயிற்சியுமே அவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணங்களாகின்றன.

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் நற்பிரஜையாக சமூகத்தில் ஒரு எடுத்துக்காட்டாக எமது பாடசாலையின் பெயரை நிலை பெற வைக்க வேண்டுமென இவ் வருடத்துடன் ஓய்வு பெற இருக்கும் நான் உங்களை வாழ்த்துவதுடன், கடந்த எட்டு வருடங்களாக பகுதித் தலைவராக எனது கடமையைச் செய்வதற்கு உறுதுணையாக இருந்த எமது அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுவதுடன், உயர்தர தின விழா சிறப்பாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி. பொ. ருத்திரா**
பகுதித் தலைவர் (உயர்தரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்திடுவோம் வாரீர்!

எண்ணும் எழுத்தும் இரு கண்களென்றே
ஏற்றமுடன் நற் கல்வி கற்பதற்கு
நிம்மர் குருவின் அருட்பணியால்
திகழும் உவெஸ்லிக் கூடமதில்
பேர் பெற்ற நல் அதிபரென
பெரும் பணியாற்றிவரும்
நல்ல வல்ல அதிபராம் பிரபாகரன் ஐயாவை
வண்ண மலர்கள் பல தூவி
வாழ்த்திடுவோம் வாரீர்!

நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்
தன்னம்பிக்கை யூட்டும் தகைசான்ற சொற் பெருக்கும்
காரியத்தில் உறுதி கொண்ட கலங்கா நெஞ்சமும்
கையசைவிலே மாணவரைக் கட்டியாளும் சிந்தையும்
அதிபருக்கே உரித்தான ஆளுமையும் பெற்ற
தற்துணிவு கொண்ட தகைமையாளனை
பொன்னாடை புனைந்து
புகழ்ந்திடுவோம் வாரீர்!

ஆசிரியர் பணியேற்று அறிவை ஈர்ந்து
பிரதி அதிபராய் பெரும் பணியாற்றி
இரண்டாயிரத்தி ஒன்பதில் ஏற்றம் மிகு அதிபராய்
ஈன்றோர் உவக்கும் இனிய பணியேற்று
ஆசிரியர் மாணவரை அன்பால் அரவணைத்து
சீரிய நற்கல்வியினை செம்மையாய் பெறவைக்கும்
நல்லதொரு மேய்ப்பனாம் கல்லூரி முதல்வருக்கு
பொன்னாரம் சூட்டி போற்றிடுவோம் வாரீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக வளங்களையும் பாடவிதானத்தையும்
பாங்காய் மாணவர்களுக்கு பகிர்ந்தளித்து
மறைகாணியாய் மாணவர் நலன் காத்து
வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள்,
தகைசான்ற ஆசான்களென
பட்டம் பதவி பெறும் பல்கலைக் கழக அனுமதியில்
பாடசாலை வரலாற்றில் பாரிய உயர்ச்சி கண்டு
நல்ல கல்விப் பயிர்வளர்த்த நற்கருணையாளனுக்கு
நவரெத்தின மணியாரத்தை நலம்பெறவே சூட்டி
வாழ்த்திடுவோம் வாரீர்!

உள்ளத்தனைத்திலும் உவெஸ்லியின் உயர்ச்சிக்காய்
ஓயாது உழைத்திடும் உன்னத பணிக்கு
சிறந்த அதிபர்க்கே உரித்தான ஜனாதிபதி விருதாம்
"குரு பிரதீபா" அதிபர் விருதினை
ஆறு தடவைகள் அடத்தடுத்து பெற்று
சாதனை படைத்த பெருந்தகையாளனை
வையத்துள் வாழ்வாங்கு வாழவென்றே நல்ல
வைரமுடி சூட்டி
வாழ்த்திடுவோம் வாரீர்!

கவிதையாக்கம்
**திருமதி. சாந்தகுமாரி பரமலிங்கம்**
ஆசிரியை குரு பிரதீபா பிரபா
B.A.Dip in Edu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Science Stream Teachers

| | |
|---|---|
| Biology | Mrs. V. Elanganathan, Mrs. SR. Sinthuja |
| Com. Mathematics | Mr. K. Ruthramoorthy, Mrs. J. Siritharan |
| Physics | Mr. S. Uthayarajah, Mr. MSM. Jihath |
| Chemistry | Mrs. SZM. Aboobucker, Mr. S. Imthiyas |
| Agro Science | Mr. P. Ranjan |
| GIT | Mr. S. Partheepathasan |
| General English | Mrs. K. Zipra |

# Name of Bio Students (2019 Batch)

1. T. Barclay Ashwinth
2. K. Nerujan
3. S. Jadusun
4. J.M. Shalomy
5. S. Fathima Ramya
6. M. Nivetha
7. R. Layaharyah

# Name of Maths Students (2019 Batch)

01. M. Sathursan
02. S. Pravinth
03. I. S. Rony Jeferson
04. S. Kirieshan
05. S. Januskar
06. N. Mithurshan
07. K. Jakshika
08. S. Fathima Reefath

## Commerce Stream Teachers

| | |
|---|---|
| Business Studies | Mrs. P. Rudra, Mrs. K. Umawaran |
| Accounting | Mrs.S. Visvanathan, Mr. K. VijayaKumar |
| Economics | Mr. V. Inthirakumar, Mrs, L. Arulkantharaja |
| GIT | Mr. S. Partheepathasan |
| English | Mrs. S. Vathaman, Mrs K. Zipra |

## Name of Commerce Students (2019 Batch)

T.D.Barthalomeusz
K.Dinoth
K.N.Nilojan
T.Thanujan
T.Kirishanthan
J.Thishan
S.Shopana
M.Rakshana
T.Priya
R.Harsha
K.Lathushini
M.Niro
J.Sujana



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Technological Stream Teachers

| | |
|---|---|
| Engineering Technology | Mr. Y. Thavajeevan |
| Bio System Technology | Mrs. P.Balasupramaniyam |
| Science for Technology | Mrs. V. Ilanganaathan |
| | Mr. K. Ruthramoorthy |
| | ~~Mr. S.Imthiyas~~ |
| | Mr. S.Uthayaraja |
| ICT | Mrs. MGF. Nasriya |
| Agriculture | Mr. P. Ranjan |
| Maths | Mr. MSM. Jihath |
| English | Mrs. Fathima Risna |
| GIT | ~~Mr. MM.Nismy~~ |

## Name of Eng. Technology Students (2019 Batch)

01.P.Mathirtharan
02.K.Dino
03.N.Rishanthan
04.T.Thilakshan
05.P.Nuthukshan
06.A.Venuganth
07.V.Dilakshan
08.S.Nithurshan
09.F.Farhan
10.S.Sifan

## Name of Bio. Technology Students (2019 Batch)

01.M.Kishobiha
02.J.Thinuja
03.S.Nivolin
04.S.Thijanika
05.S.Irshana Fravin
06.A.H.F.Rihasa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Arts Stream Teachers

| | |
|---|---|
| Tamil | Mrs. S. Mahenrarajah , I chanthira Kumar |
| Political Science | Mr. T. Kartheepan |
| Logic | ~~Mrs. Y. Selvarajah~~ MRS Y. Selvarajah |
| Agro Technic | Mrs. B. Chandrakumar |
| Drama & Theatre | Mrs. R. Allis, Mrs. ~~K. Thevaranjan~~ J. Mohan |
| Music K. Vijaya Ragavan | ~~Mrs. V. Srithaksan~~ MRS. B. Urithran |
| Dance | Mrs. M. Sureshkumar , Mrs. N. Thayaparan |
| Art | Mr. S. Srithaksan Mrs. S. Tharmendra |
| Christianity | Mrs. A.J. Christorex, Mr.G. Alfred Haran |
| Hindu Culture | ~~Mr. S. Vimalraj~~ MRS D. Kokulathepan |
| Islam | Mr. N.M. Jaleel MR A. Maheswaran |
| Home Economics | Mrs. N. Amalanathan |
| Grography | Mrs. ~~S. Thayaparan~~ S. Kumanan |
| History | Mrs. P. Manokaran |
| GIT | Mr. S. Partheepathasan Mrs Nasrila Malic |
| English | Mrs.R.M.Mariyarajvaz, Mrs. S. Neroshan |
| | ~~Mrs.L.Arulgnanamoorthy~~ |
| | Mrs.M.Rangarajan , ~~MRS T. Thevakumar~~ |
| Ag. Sci | Mr. P.Ranjan |

## Name of Arts Students (2019 Batch)

**A**

01.K.Vinukshan
02.S.Kishokanth
03.L.Harishan
04.N.Saraniya
05.J.Sneha
06.S.Praveena
07.Y.Prathikka
08.Y.Sivaneeja
09.J.Tharmiha
10.S.Thanusiya
11.T.Bawatharani
12.N.Swarna
13.I.Jarshika
14.S.Dino
15.G.Ilajjana

**B**

16.S.Thanushkaran
17.A.Dilakshan
18.A.M.Raiz
19.S.Nowsath
20.S.Krishanth
21.S.Thishanthan
22.S.Janahan
23.S.Mathuwanthi
24.K.Rubeka
25.A.F.Nuha
26.S.Thurshika
27.M.N.Sibla
28.K.Vinothini
29.K.Anuja
30.J.Keerthika



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Students Who are Selected for The University

**1979**

| | |
|---|---|
| Medicine | K. Kumuthini |
| Engineering | M. Kirupaharan |
| Law | T. Thamilarasan |
| Physical Science | S. Pirnavasoathi, S. Satkunamalar |
| | M. Vasanthakumari |
| Commerce | S. Ganesamoorthy |
| Arts | T. Ariyamalar, V. Vvarnakulasingam |
| | P. Thusyanthini, S. Potselvi |
| | S. Malini, M.Komethagam |

**1980**

| | |
|---|---|
| Medicine | A.G. Thevaranjan |
| Engineering | P. Sivasithamparam |
| Law | s. Mohamed Jameel |
| Physical Science | S.Rasambikai, S.venuga |

**1981**

| | |
|---|---|
| Medicine | P. Arulpragasam, S. Chanthirapalan |
| vetinery Science | M.A.M. Fazie, M.C.M. Junaid |
| Physical Science | J. Annanavaparathi, S. Kumuthini |
| | S. Shanthidevi |
| Management | V. Rubaskaran |
| Agriculture | M.M.M.Fazeel |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1982

| | |
|---|---|
| Medicine | M. Mathiyalagan |
| Engineering | I.L Ameenul Bari, G. Baskaran<br>G. Jeyamohan, T. Jeyamohan<br>N. Vemalarajah |
| Physical Science | S. Murugathas, T. Subarajan<br>M. Vasanthakumari |
| Agriculture | S.Siyamalagowry, S. Kalaranjiny |
| Arts | S.Jeevarajah,S.Punitham,K.Kalavathy<br>K.Thurairajasingam, K.Santhakumary<br>K. Selvarany, P. Kunaratham |

## 1983

| | |
|---|---|
| Medicine | S. Vamathevan |
| Engineering | A.Ahamed Satheek, V.Nanthini |
| Dental Science | N. Santhimathi |
| vetinery Science | R. Sathiyathevi |
| Agriculture | M.C. Jeya |
| Physical Science | K.Sugumar, S. Puvinojini<br>M Pathamaranjini |
| Arts | A. Antony Rajan, K. Sugirtharani |

## 1984

| | |
|---|---|
| Engineering | N. Nanthananthan, T. Thayaesvaran<br>N. Thyaparan |
| Management | K. Ithayarajah |
| Agriculture | M.Puspalatha |
| Arts | P.K.Mariyamanagalam |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1985**

| | |
|---|---|
| Medicine | A. Thusitha, M.C.M. Mahir |
| Engineering | T. Sivayogam, N. Miyhulananyhan |
| Bio Science | G. Jayasanthy |
| Physical Science | U.A. Naziar, V. Pakkiyarajah |
| Commerce | T. Baskaran |
| Arts | A.M. Jiffry, M.Y.M. Najeem |

**1986**

| | |
|---|---|
| Medicine | S. Sujikalathevi, N.Ramesh, M.I. Irsath |
| Engineering | U.L.A. Nazar |
| Bio Science | A.Zeenathul Marjoon, E.Jekatheesvary<br>T. Kamarajan, P. Suventhiran |
| Physical Science | K. Baskaran, G. Suraganan |
| Arts | A.Satheek, T.Thayalan |

**1987**

| | |
|---|---|
| Medicine | Y. Ubaithullah |
| Engineering | K. Baskaran, |
| Bio Science | R.Mathiyalagan, A.H.MohamedAmeen |
| Agriculture | R.Sivanesan |
| Arts | S. jayaranjanee,N.Jayanthini, A.Nalim<br>S. Mohanaraj, S. Santhirasegaram |
| Law | K. Ravindran |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1988**

| | |
|---|---|
| Medicine | M.H.Vajna |
| Physical Science | T. Paramanatham |
| Bio Science | S. Muralitharan, S.Sumanthinithevi |
| | A.H. Ameen, T. Ketheesan |
| commerce | S. Pramaharan, R. Thirunavukarasu |
| | S. Ravichanthiran, S. Thevethuyan |
| Arts | M. Lakkumam |

**1989**

| | |
|---|---|
| Medicine | M. Sujatha |
| Engineering | V. Ravindran |
| Bio Science | T.Ketheesan |
| Commerce | K. Sivakumar |
| Physical Science | K.Kovannan, V. Thevakumar |

**1990**

| | |
|---|---|
| Engineering | M.B. Rauf |
| Bio Science | Y.I.Shajafullah |
| Commerce | S. Mythili, M.Y.M. Satheek |
| Arts | K. Thankaththurai, S. Sivarajah |

**1991**

| | |
|---|---|
| Medicine | Y.I.Sajafullah |
| Engineering | M.B. Rauf |
| Bio Science | S.Sivathasan |
| Physical Science | A. Kaleelur Rahman |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1992**

| | |
|---|---|
| Medicine | S. Sivathasan |
| commerce | K. Lingesvaran, S. Varatharajah |
| | M.Mohanathas |
| Arts | P. Sachithanantham, P.Arunakrinathan |

**1993**

| | |
|---|---|
| Medicine | T. Vinothini |
| Agriculture | V. Rajenthra Kumar |

**1994**

| | |
|---|---|
| Physical Science | P. Kalyani |
| Bio Science | G. Sumbaththijra |
| Commerce | S. Vimalarajah, S. Jeyapalan |

**1995**

| | |
|---|---|
| Medicine | K. Suthesvary |
| Management | M. Kulasegaram |
| Arts | R. Ganesan, S. Chanthirakumar |

**1996**

| | |
|---|---|
| Physical Science | S. Uthayarajah |
| Management | K. Thiruchchelvam |
| | T. Vijayakumar |
| Arts | N. Sabesan |
| | S.Mathivathani |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1997**

| | |
|---|---|
| Engineering | T. Thavarajah |
| Physical Science | S. Uthayarajah |
| Bio Science | S. Kirupananthan |
| Management | P.B. Navarajah |

**1998**

| | |
|---|---|
| Physical Science | S. Partheepan, A. Sathees Kumar |
| Arts | T. Utthayajeevamalar |
| | A. Arunthavarani |

**1999**

| | |
|---|---|
| Management | S. Mugunthan |
| Commerce | A.P Gunapalan, K. Vimeleshvaran |
| | T. Uthayakumar |
| Arts | S. Premavathani |

**2000**

| | |
|---|---|
| Physical Science | M. Jayakanthan, T. Kandeepan |
| | S. Sathees Kanthan, A. Thivakaran |
| Commerce | P. Jeyamalini |
| Arts | S. Srikaran, C. Premini |

**2001**

| | |
|---|---|
| Physical Science | M. Jayakanthan |
| Arts | S. Logesvaran, A. Mathusoothanan |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2002**

| | |
|---|---|
| Medicine | M. Prasath |
| Bio Science | P. Thusitharan |
| Physical Science | S. Pothirajah, N. Suresh, R. Thusiyanthan |
| Arts | P. Thayalini, K. Rasikala, S. Satheepavani S. Ranjini, K. Mohanathas |

**2003**

| | |
|---|---|
| Bio Science | S. Raguvaran |
| Physical Science | K. Rahini |
| Commerce | G. Prasanthan |
| Arts | P. Kamalarajah, I. Sasikala, M. Lillymalar |

**2004**

| | |
|---|---|
| Physical Science | M. Mohanarajah |
| Arts | S. Rupavani |

**2005**

| | |
|---|---|
| Arts | S. Kalaimath, T. Kala |

**2006**

| | |
|---|---|
| Bio Science | P. Manchereka |
| Commerce | P. Priyatharsan |
| Arts | T. Silogini, T. Kirushnavani, P. Rajeesh |

**2007**

| | |
|---|---|
| Quantity Survering | P. Jerusan |
| Agro Science | P. Manchireka |
| Animal Science | M. Jalini |
| Physical Science | S. Pragalathan |
| Arts | S. Thieepan, N. Rajkumar S. Kalista Cowsalya, V. Santhirakanthy M. Mathura, S. Sowmiya, K. Sutharsan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008

| | |
|---|---|
| Medicine | T. Mythry |
| Siddha Medicine | V. Varuna |
| Agriculture | M. Pagirathy |
| Bio Science | K. Bhanuga, E. Niluksana |
| Physical Science | P. Thadshyan, T. Dinesh |
| Arts | T. Kumuthini, S. Pratheepa, Y. Anitha |
| | K. Sangika |

## 2009

| | |
|---|---|
| Medicine | S. Thiluxie |
| Bio Science | T. Hemapriya |
| Eingineering | K. Kishakatheesh |
| Surveyoring | T. Dinesh |
| Physical Science | R. Ramanathas, M.Pavirajah |
| Arts | N. Ketheesvaran, N. Kopiga |
| | S. Kiruthithiga, Y. Vinotharsan |
| | P. Rajipalan, R. Suganya |

## 2010

| | |
|---|---|
| Physical Science | K. Thaseepan |
| MIT | G. Nisanthini |
| Commerce | S. Shanathan, T. Pirakash |

## 2011

| | |
|---|---|
| Medicine | P. Kethujan |
| Siddha Medicine | S. Sanjala |
| Engineeirng | T. Elanthika |
| Physical Science | M.I. Fathima Akeela |
| Management | S. Puspakanthan |
| Arts | R. Kajenthini, J. Mahinthini, K. Sathana |
| | S. Niroja, V. Nalini, J. Dilakshika, K. Sinthu |
| | P. Puviraj, S. Mirna Jenifar |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2012**

| | |
|---|---|
| Medicine | P. Titus Sanjay |
| | E. Mithuran |
| | N. Upenthiran |
| Siddha Medicine | M. Vanisiri |
| Architecture | \|R. Kavilan |
| Arts | S. Thevika, T. Thiviya, K. Thusanthini |
| | L. Sanuraj, M. Laksini, Tharmitha |
| | R. Kejenthini, S. Thushalini |

**2013**

| | |
|---|---|
| Siddha Medicine | S. Derjan, K. Dinosini |
| Unani Medicine | P. Praveenan |
| Quantity Surveying | A. Jayshanth |
| | R. Logithan |
| ICT | S. Pratheesan |
| Management | N. Sutha, T. Prasanth |
| Arts | M. Sinthana, I. Thusyanthi |
| Art & Design | A.R.M. Hathe |
| Sports Science Mgt | L. Thanushiya |

**2014**

| | |
|---|---|
| Surveying | M. Jathursan |
| ICT | A.P Nivetha |
| Bio Science | V. Thenuka |
| Arts | N. Diashika, S. Sanjutha |
| | J. Jayaladchumi, R. Varathaledchumi |
| | K. Pavithra, S.K. Deliciya |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015

| | |
|---|---|
| Medicine | S. Kugadarshi |
| Physical Science | S. Hishobaba |
| Commerce | Y. Rajitha, G. Thusanthan |
| Arts | K. Tipogini, J. Anusiya, A. Viruthika, L. Thurshana, K. Thanusha, J. Rokshana S. Tharsika, J. Shomika, N. Kalpanakumar |
| Management | S. Thathusana |
| Archologe | S. Sayanthakumari |
| Drama | S. Tharsika |

## 2016

| | |
|---|---|
| Engineering | T. Niluksha |
| Management | S. Subosana |
| Law | P. Thuvaraka |
| Peace & Revolution | T. Dhailakshini |
| MIT | M. Vithyajini |
| Arts | M. Mithursana, T. Thivya, N. Nilany Y. Jeeritha, N. Kokulraj, P. Janojini, K. Gajenthairan |
| Dnace | T. Kugalya |
| Art | N. Janushan |
| Drama | P. Niloshini |

2018

## 2017

| | |
|---|---|
| Engineering | L. Prakavi |
| Medicine | A.K.M. Afkar |
| Law | J. Kishor |
| Peace& Revolution | V. Sujanthan |
| Management | Y. Anojan |
| Commerce | V. Arthini |
| Dance | S. Thasankika |
| Drama | S. Vimalatharshan I. Mesha |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Staff - 2018

01. Mr. V. Prabakaran(Principal)
02. Mr.S. Kalaiyarasan(DP)
03. Mr.s Thevachanthira(DP)
04. Mr. S. Sivakaran (VP)
05. Mr.P. Kamalathasan(VP)
06. Mrs. U. Mylvaganam
07. Mrs. P. Rudra
08. Mrs. V. Elanganathan
09. Mrs. SZM. Aboobucker
10. Mrs. S. Paramalingam
11. Mrs. S. Thayaparan
12. Miss. R. Pushpawathy
13. Mrs. Y. Selvarajah
14. Mrs. M.T. Alagurajah
15. Mrs. S. Shanthakumar
16. Mrs. KAH. Amalarajah
17. Mrs. M. Kopalasingam
18.Miss. K. Annanesam
19. Mrs. S. Mahenthirarajah
20. Mrs. R. Arulrajah
21. Mrs. V. Thirunavukarasu
22. Mrs. JR. Jeevakadacham
23. Mrs. AJ. Christorex
24. Mrs. G. Siva
25. Mrs. N. Amalanathan
26. Mr. S. Ravinthirakumar
27. Mrs. SM.Kamal
28. Mrs.I. Kulendran
29. Mr. MAMM. Rishmy
30.. Mrs. R. Sayatharan
31. Mrs. V.Ganesan
32. Mr.s. P.Ithayarajh
33. Mrs. Allies
34. Mr. T. Vilvarajah
35. Mrs.M. Rangarajan
36. Mrs.T. Kovinthasami
37. Mrs.I. Arulgnanamoorthy
38. Mrs. K. Sanathanan
39. Mrs. S. Vaathaman
40. Mrs.M. Sureshkumar
41. Mr. S. Imthiyas
42. Mr. K. Ruthramoorthy
43. Mr. S. Uthayarajah
44. Mrs. V. Vijayakumar
45. Mr.G. Alfred Haran
46. Mrs.U. Nimal
47. Miss.J. Sivakaran
48. Mrs. L. Arulkantharajah
49. Mrs. R. Kumarathepan
50. Mrs. R. Maril Mariyaraj Vaz
51. Mrs. P. Manokaran
52. Mrs. S. Visvanathan
53. Mrs. B. Chandrakumar
54. Mr. MSM. Nakeeb
55. Mrs. S. Mohan
56. Mrs. CP. justin
57. Mrs. S. Kalawathani
58. Mrs.K. Umavaran
59. Ms. J. Mohan
60. Mr. K. Vijayakumar
61. Mrs. N. Thupan
62. Mrs. T. Subarajan
63. Mrs. Y. Baskaran
64. Mr. T. Karthepan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. Mr. Y. Thavajeevan
66. Mr. S. Piratheepathasan
67. Mr. S. Vimalaraj
68. Mr. MSM. Yasar
69. Mrs. K. Thevaranjan
70. Mrs. S. Thasarathan
71. Mr. S. Sivaranjan
72. Mrs. AC. Inoon Marutha
73. Mrs. V. Srithaksan
74..Mrs. V. Srithaksan
75. Mr. S. Partheepan
76. Mrs. J. Sritharan
77. Miss. DG. Inuka Priyanthi
78. Mrs. T. Sutharsan
79. Mrs. AM. Zifra
80. Mr. NM. Jaleel
81. Mrs. N. Thayaparan
82. Mr. P. Ranjan
83. Mrs. S. Tharmenthira
84. Mrs. S. Mathiyalagan
85. Mrs. R. Sindhuja
86. Mr. V. Inthirakumar
87. Mrs. A.L. Fathima Risna
88. Mr. S. Suthakaran
89. Mr. K. Raju
90. Mr. A. Prinsly Bernard
91. Mrs. MGF. Nasriya
92. Miss. K. Nitharsika
93. Mr. M.M. Nismy
94. Miss. MBN. Suja
95. Mr. MSM. Jihath
96. Mrs. P. Balasuprananiyam
97. Mr. M.M. Shajath
98. Mrs. M. Thayaparan
99. Mrs. S. Segar
100. Mr. S. Satheeskumar
101. Mrs. M. Sanmugarajah
102. Mrs. K. Vijyaragavan
103. Miss. N. Thanusiya
104. Mrs. S. Kumanan
105. Mrs. M. Nitharshan
106. Mrs. S.L. Riswana
107. Mr. S. Shopanarajah
108. Mr. T. Sasikaran
109. Miss. K. Sapthika

## Non Acadamic Staff

01. Mr. S. M. Farsath
02. Miss. J. Grace
03. Mr. J. Balasundaram
04. Mrs. T. Sivakumar
05. Mr. N. Thivviyakumar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளூமின் பகுப்பியலில் அன்டர்சன் ஏற்படுத்திய மாற்றங்களும், கற்றல் - கற்பித்தல், மதிப்பீடுகளில் அவற்றின் பங்களிப்பும்.


உலகில் கல்வித்துறையில் ஏற்படும் பாரியமாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் கல்வியிலாளர்களின் சிந்தனைகளே அடிபடையாகின்றன. இதனடிப்படையில் 1956இல் அறிமுகப்படுத்தப்பட்ட புளூமின் பகுப்பியலானது கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியகல்விச் செயற்பாடுகளில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக செல்வாக்குச் செலுத்திவந்துள்ளது.

அறிவு விரிவாக்கமும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் புளூமின் பகுப்பியலை மேலும் மீள் கட்டுமானப்படுத்த வேண்டிய தேவைக்குள் தள்ளியது. அந்தவகையில் புளூமின் முன்னாள் மாணவர்களில் ஒருவரான லொறின் அன்டர்சன் (Lorin.W.Anderson) கல்விக் குறிக்கோள்களின் பகுப்பியல் தொடர்பானகுழுவில் புளூமுடன் இணைந்து செயலாற்றிய டேவிட் கிராத்வொல் (David R. Krathwohl) என்பவருடன் இணைந்து புளூமின் பகுப்பியலைமேலும் மீள்கட்டுமானப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார் இதன் நோக்கம் 21ஆம் நூற்றாண்டில் ஆசிரியரும் மாணவரும் இப்பகுப்பியலை விசாலிக்கவேண்டிய தேவையை நிறைவு செய்வதாகும். அறிகை உளவியலாளர்கள், கலைத்திட்டக் கொள்கையாளர்கள், போதனை ஆய்வாளர்கள், சோதனை மற்றும் மதிப்பீட்டுவல்லுனர்கள் ஆகியோரின் முயற்சியில் உள்ளடக்கப்பட்டனர். இவர்களின் ஒட்டு மொத்த முயற்சியினால் புளூமின் பகுப்பியலினது புதிய ஒழுங்கமைப்பினை 2001 இல் வெளியிட்டனர்.

புளூம் பகுப்பியல் படிமுறையில் ஆறு (06) முக்கியமான கட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவை கற்றல் கற்பித்தல் செயன்முறை, சோதனை, மதிப்பீடு, பகுப்பாய்வுமுறைகள், புத்தாக்கம் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக ஆறு பெயர் சொல் விளக்கங்களை உள்ளடக்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்டர்சன் ஏற்படுத்திய மாற்றங்கள் என்னும் போது 1995 இருந்து 2001 வரையான ஆறு ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு கல்வித்துறைசார்ந்த அறிஞர்களை உள்ளடக்கி புதிய மாற்றங்கள் புளூமின் பகுப்பியலில் மேற்கொள்ளப்பட்டன. இந்த மாற்றங்கள் பின்வரும் மூன்று அடிப்படைகளில் அமைந்துள்ளன.

1.சொல்லியல் மாற்றம்

2.அமைப்பியல் மாற்றம்

3.வலியுறுத்தல் சார்மாற்றம்

சொல்சார் மாற்றங்கள்:

சொல்சார்ந்த அடிப்படையிலான மாற்றங்கள் என்பது புளூமின் பயன்படுத்தப்பட்ட பெயர்ச்சொல் சார்ந்த முறையியலை வினைச்சொல் அடிப்படையில் மாற்றிய செயற்பாடாகும். இங்கு ஒரு பரிமாணம் புளூமினால் பின்பற்றப்பட்டது. அதாவது அறிக்கைத் திறன்கள் மட்டுமே இவரது பகுப்பியல் படிமுறையில் விளக்கப்பட்டது. ஆனால் அண்டர்சன் குழுவினரால் இவை வினைச்சொல் அடிகளாக மாற்றப்பட்டது. இங்கு இருபரிமாணம் பின்பற்றப்பட்டது.


i. அறிவுப் பரிமாணம்

ii. அறிக்கைச் செயல்முறைப் பரிமாணம்

இதற்காகபின்வரும் ஆறு செயலாற்றுகைக் கட்டங்கள் விளக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னையபெயர்ச்சொல் புதியவினைச்சொல் அமைப்பு

1.நினைவுபடுத்தல்:

ஞாபகத்தில் இருந்த அறிவை மீட்டுணர்தல், நினைவு கூர்தல், இனங்காணுதல் குறிப்பாக வரைவிலக்கணங்கள், விடயவிபரங்கள், பட்டியல்கள், ஒப்விப்புக்கள் போன்றவற்றை வழங்கும் பொருட்டு ஞாபகத்தினைப் பயன்படுத்துதல்.

2.விளங்கிக் கொள்ளல்.

எழுத்துவடிவில் அல்லது வரைவு வடிவில் காணப்படும் தகவல்களுக்கு கருத்து வழங்கல், விரிவாக்கம் செய்தல், வகைப்படுத்தல், தொகுத்தல், அனுமானம் செய்தல், ஒப்பிடல், விளக்குதல் போன்ற செயற்பாடுகளை முன்வைத்தல்.

3.பிரயோகித்தல்:

சில வழி முறைகளுக்கூடாக பெற்ற அறிவை செயலாற்றுதல் அல்லது நடைமுறைக்கு கொண்டு வருதல் அதாவது மாதிரி உருக்கள், அளிக்கைகள் பாவனைகள் போன்ற செயற்பாடுகளுக் கூடாகக் கற்றுக் கொண்ட விடயங்களை பொருத்தமான நிலைமைகளில் பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பகுப்பாய்வு செய்தல்

கற்றவிடயங்கள் அல்லது எண்ணக்கருக்களைக் கூறுகளாக்குதல் இக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புபட்டுள்ளன எனவும் இக் கூறுகள் முழுமையுடன் எத்தகைய தொடர்பை பேணுகின்றன எனவும் அறிந்து கொள்ளல், வேறுபிரித்தல், ஒழுங்கமைத்தல், தொடர்புபடுத்தல் போன்ற உளத்தொழிற்பாடுகள் ஆகியனயாவும் பகுப்பாய்வு செய்தல் எனும் செயற்பாட்டினுள் உள்ளடங்குவன. படங்கள், அட்டவணைகள், வரைபுகளால் குறித்தல் போன்றசெயல்களுடாக இவ் வகை உளத்தொழில்பாடுகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

5. மதிப்பீடு செய்தல்

நியதிகள் மற்றும் தரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒப்பீடு, விமர்சனநோக்கு போன்றவவை ஊடாக தீர்ப்புகளை மேற்கொள்ளுதல் அதாவது விமர்சனங்கள், விதிப்புரைகள், அறிக்கைகள் போன்ற மதிப்பிடுதல் செயற்பாடுகளை வெளிக்காட்டுகின்றன. மதிப்பீட்டுச் செயற்பாடானது புதியது எதனையும் படைப்பதற்கு முன்னோடியாக அமைய வேண்டியது அவசியமாகும். இதன் காரணமாக புதிய ஒழுங்கமைப்பில் மதிப்பீடு செய்தல் ஐந்தாவது படிநிலையாக இடம் பெறுகிறது.

6. படைத்தல்

பகுதிகள் ஒன்றிணைந்த ஒரு முழுமையை உருவாக்கும் வகையில் மூலகங்களை ஒன்றுசேர்த்தல், உருவாக்கல், திட்டமிடல் அல்லது உற்பத்திஊடாக மூலகங்களை புதிய ஒருகோலமாக அல்லது அமைப்பாக ஒழுங்கமைத்தல் போன்றன இங்கு கருதப்படுகின்றன. அதாவது உள்ளடங்கும் கூறுகளைப் புதிய வழிமுறையில் ஒன்றுசேர்ப்பதன் மூலமாக ஒரு புதியவடிவத்தை அல்லது உற்பத்தியை உருவாக்குதல் இங்கு கருதப்படுகின்றது. பகுப்பியலின் ஒழுங்கமைப்பில் இதுவே மிகக் கடினமான உளச்செயற்பாடாகும். எனவே, புதிய ஒழுங்கமைப்பில் சொற்பதங்கள் மேற்கண்டவாறு விளக்கம் பெற்றுள்ளன. இது புளுமின் பகுப்பாய்வில் லொறின் அன்டர்சன் ஏற்படுத்திய மாற்றமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அமைப்பியல் ரீதியான மாற்றம்

அமைப்பு ரீதியான கட்டமைப்பு மாற்றத்தினை நோக்கும் போது அன்டர்சன் புளூமின் ஒருபரிமாண மாதிரிக்கு பதிலாக இரு பரிமாணமாதிரி அறிவுசார்ந்தும் அறிகைச் செயல் முறைசார்ந்தும் முன்வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அமைப்புமாற்றமாக இது கொள்ளப்படினும் பின்னர் தர்க்கரீதியானவையாக கொள்ளப்பட்டன. இங்கு விளைவுகளை உள்ளடக்குதல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட பகுப்பாய்வில் இரு பரிமாண அடிப்படை செயலுருப் பெறுகின்றது. இதன் மூலம் போதனையை மேம்படுத்துதல், பாடங்களும் கணிப்பீடுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுத்தப்படுதல் ஆகியன அறிவுசார் செழிப்புக்கு காரணமாகும்.

அறிவு மற்றும் அறிக்கைச் செயல்முறைகளின் இடைவெட்டு தனித் தனியாக இருபத்திநான்கு (24) கலங்களைஉருவாக்குகிறது. இதனை பின்வரும் மாதிரி காட்டுகின்றது.

**அறிவுப் பரிமாணங்களை எடுத்துக் கொண்டால் அது நான்கு வகையாக நோக்கப்படுகின்றது. அவையாவன**

**1.விடயங்கள்சார் அறிவு: (Factual Knowledge)**

இதுவே ஒவ்வொரு கற்கை ஒழுங்குக்கும் அடிப்படையாது. குறித்த ஒரு கற்கை விடயத்தை விளங்கிக் கொள்ளும் பொருட்டோ அல்லது ஒரு பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டோ ஒரு மாணவன் அறிந்திருக்க வேண்டிய அல்லது பரிச்சயப்படுத்த வேண்டிய அத்தியாவசியமான விடயங்கள், சொற்பதங்கள், விபரங்கள், மூலகங்கள் ஆகியன பற்றிய அறிவு.

**2.எண்ணக்கருசார் அறிவு: (Conceptural Kowledge)** குறித்த ஒரு கற்கை ஒழுங்கு அல்லது கற்கைத் துறையுடன் தொடர்புடைய வகைப்படுத்தல்கள், கொள்கைகள், கோட்பாடுகள், பொதுமையாக்கங்கள், மாதிரி உருக்கள், அமைப்புகள் போன்றவை பற்றிய அறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அறிவுப்பரி மாணங்கள் | 01. நினைவு படுத்தல் | 02.விளங்கிக் கொள்ளல் | 03பிரயோகித்தல் | 04.பகுப்பாய்வு செய்தல் | 05.மதிப்பீடு செய்தல் | 06.படைத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 01.விடயங்கள் அறிவு | பட்டியலிடுக | சுருக்குக | வகைப்படுத்துக | ஒழுங்காக்குக | வரிசைபடுத்துக | இணைக்குக |
| 02.எண்ணக் கருக்கள் சார் அறிவு | விபரிக்குக | விளக்கமளிக்குக | பரிசோதிக்குக | விளக்குக | கணிப்பிடுக | திட்டமிடுக |
| 03.வழி முறைசார் அறிவு | அட்டவணைப் படுத்துக | எதிர்வு கூறுக | கணிக்குக | வேறுபடுத்துக | முடிக்குக | தொகுக்க |
| 04.மீ அறிகைசார் அறிவு | பொருத்தமாக பயன்படுத்துக | நிறைவேற்றுக | அமைக்குக | அடைக | செயற்படுக | உணர்க |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.வழிமுறைசார் அறிவு: **(Procedural Knowledge)**

ஒரு கற்கைத் துறையுடன் பாடவிடயத்துடன் குறிப்பான செயலை மேற்கொள்வதற்கு மாணவருக்குத் தேவைப்படும் அறிவு அல்லது தகவல்களை குறிப்பிடகின்றது. விசாரணை முறைகள், குறிப்பான அல்லது துல்லியமான திறன்கள், நுட்பங்கள், முறையியல்கள் என்பவையும் இங்கு கருதப்படுகின்றன.

4.மீஅறிக்கைசார் அறிவு: **(Metacognitive Knowledge)**

ஒருவர் தனது அறிக்கை பற்றி அல்லது குறித்த அறிகைத் தொழிற்பாடுகள் பற்றிப் பெற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு தன்னைப்பற்றிய அறிவு, சந்தர்ப்பத்துக்கு பொருத்தமான அறிவு என்பவை உள்ளடங்கிய நிலைப்பாட்டில் பிரச்சினைக்குத் தீர்வுபெறுதல் மற்றும் அறிகைப் பணிகள் என்பவவைசார்ந்த தெறிசிந்தனை அல்லது சிந்தனை உபாயங்கள் இங்கு கருதப்படுகின்றன.

வலியுறுத்தல்சார் மாற்றம்

அறிவுப் பரிமாணங்களில் மூன்றாவதாக வலியுறுத்தல்சார் மாற்றங்கள் அமைகின்றது. பகுப்பியலானது எண்ணற்ற குழுக்களினால் "எதிர்பாராதவிதத்தில்" பயன்படுத்தப்படுகின்றது என்ற புளுமின் அங்கீகாரத்துடன் நாம் உடன்பட்டாலும் அவரது குழு இதனை எண்ணக் கருவாக்கம் செய்தபோது அவற்றினைக் கருத்துக் கெடுக்கவில்லை. இதனை கற்றல் இலக்குகளை எய்தவும் கணிப்பீடு செய்யவும் உதவும் சிறந்தவளமாக இன்றும் நாம் நம்புகின்றோம். பகுப்பியலின் பரவலான பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு இத்தகைய திருத்தியமைக்கப்பட்ட பதிப்பானது பாவனையாளர்களால் பரந்தளவில் பிரயோகிக்க கூடியமற்றும் பயன்படுத்தக் கூடிய ஒன்றாகும். இதனை கலைத்திட்டத்தை திட்டமிடுதல் போதனை விநியோகம் மற்றும் கணிப்பீட்டிற்கான யதார்த்தபூர்வ கருவியாக பயன்படுத்தலாம் என வலியுறுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேலே கூறப்பட்டவற்றிலிருந்து புளூமின் பகுப்பியலை மீள ஒழுங்மைத்து உத்தமமான பயனைப்பெறும் நோக்கில் சிறிய சிறிய ஆனால் காத்திரமானதான மாற்றங்களை முன்வைத்தார். அதாவது புளூம் தனதுகற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு செயற்பாடுகளை பெயர்ச்சொல் வடிவில் முன்வைக்க அண்டர்சன் அவற்றை வினைச்சொல் வடிவிற்கு மாற்றி முன்வைத்தார். எனினும் இம்மாற்றத்தை விடவும் வெவ்வேறு அறிகை தொழிற்பாட்டுவகைகள், அறிவுமட்டங்கள், நடைமுறைப் பயன்பாடுகள் புதிய பகுப்பியலில் எவ்வாறு அமைகிறது என்பதே பிரதான வேறுபாடாக அமைகிறது. அத்துடன் புளூமின் பகுப்பியலானது உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அறிவின் விரிவு அதன் தாக்கம் காரணமாக லொறின் அன்டன்சால் சொல்லாட்சி மாற்றம், அமைப்பியல் மாற்றம், வலியுறுத்தல்சார் மாற்றம் என மீளுருவாக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். இதன்மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் சுயகணிப்பீட்டை இலகுவாகவும் தெளிவாகவும் அமைத்துக்கொள்ள வழி ஏற்பட்டுள்ளது.

**உசாதுணைகள்**

*1.சின்னத்தம்பி.க.(2010):கல்வியியல் அளவீடும் மதிப்பீடும். சேமமடுபதிப்பகம் கொழும்பு-11*

*2.முத்துலிங்கம்.ச.(1974):கல்விப்புள்ளிவிபரவியல். ஆசிர்வாதம் அச்சகம். யாழ்பாணம்.*

தேடலும் தொகுப்பும்
**திரு. செல்லத்தம்பி - கலையரசன்**
பிரதி அதிபர்
உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்து முத்தான இரத்தினங்கள்

அம்மா

பருவத்துமகனே....மகளே!
கடவுளைத் தேடிஅலைவோர்க்கு
கடமையைச் செய்வோர் கடவுளே!
கடமையைச் செய்தால் கடவுளாகலாம்!
கடமைக்குச் செய்தால்...?
கடமையை கச்சிதமாய் செய்துவிடு!
மீதியை கடவுளிடம் விட்டுவிடு!
தரணியெங்கும் தாயைக் காண்பவன்
தடுமாறி நிற்கமாட்டான்!
அகிலமெங்கும் அம்மாவைக் காண்பவன்
ஆன்மீகத்தில் அலறமாட்டான்!

அப்பா

அப்பாவை மன்னித்து ஏற்கும் போது
படைத்தவன் ஏற்காமல் இருப்பாரோ?
கடவுளின் நிபந்தனையற்ற அன்பு
நிந்திக்காது....நிர்ணயிக்காது!
அரவணைக்கும்...ஆனந்திக்கும்!
கடவுள் தரும் சுதந்திரம் எவ்வளவு சூசகமானது என்றால்
அவரையே நீ உண்டு - இல்லை என்று பண்ணிவிடுகிறாய்!
நாத்திகன் கடவுளை நம்பாமல் நம்புகிறான்!
ஆத்திகன் கடவுளை நம்பி நம்பாமல் இருக்கிறான்!
இருப்பதைதானே இல்லைஎன்று சொல்லமுடியும!
இல்லாததையா......?
யார் கடவுள்...?
பக்திக்கு பலி கேட்பவனா? ...பசிக்கு உணவளிப்பவனா?
சிந்தித்துப் பார்......!
நூறு ஆசான்களுக்கு ஒப்பானவர்......ஓர் ஒப்பற்றஅப்பா!
பொறுமையே இல்லாதவன் கூட...ஒருகுழந்தையைப்
பெற்றெடுக்கலாம்!
ஆனால்
பொறுப்புள்ளவனால் தான் ஒருகுழந்தையை வளர்க்கமுடியும்!
மகனே மகளே
உன்னுடைய அப்பாவின் அருமை நீ வளரும் போதுதெரியாது!
உன் பிள்ளையை நீ வளர்க்கும் போதுதான் தெரியும்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

பயன்படுத்தவே பண்ட பாத்திரங்கள்!
ஆழ்ந்து உபயோகிக்கவே ஆய்வு உபகரணங்கள்!
வாய்ப்புவராது......வரவைக்கணும்!
பண உதவிபெறுவது ஒருவகை!
ஆனால்!
கல்வி உதவிபெறுவது அரியதொருவகை!
கல்வியை நீ மறுப்பது வேறு! ...கல்வி உன்னை மறுப்பது வேறு!
கல்வியை நீ மறுத்தால்......அதுஉரிமை!
கல்வி உன்னை மறுத்தால்...அதுகொடுமை!...கொடுமை!

## தொழில்

மண்ணை....கவ்வ வைக்காமல் விடாது......மமதை!
புகழும்....புகழும் சந்திக்கும் போது...பணிவே வென்று நிற்கிறது!
கற்றுக் கொள்பவனே கற்றுக் கொடுப்பான்!
உன்னை மதிப்பவரிடம் தாழ்ந்து பேசணும்!
உன்னை மிதிப்பவரிடம் வாழ்ந்து பேசணும்!
ஆர்ப்பாட்டமான வாழ்வுக்கு அருகிலேயே அழிவு!
ஆம்!
உலகம் உன்னை அறிவதைவிட
உலகிற்கு உன்னை அறிமுகம் செய்!

## பணம்

பருவத்துமகனே....மகளே!
பொருளுக்குள் அருளைப் பார்ப்பவன் மனிதன்!
அருளுக்குள் பொருளைப் பார்ப்பவன் மகான்!
எல்லாம் இருந்து துறப்பது வேறு!
எதுவுமே இல்லாமல் துறக்கிறேன் என்பதுவேறு!
உனது பொருளின் சிறுபகுதியையாவது.....அருளாக்கு!
இல்லையேல்
அது உன்னை.....இருளாக்கிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை

உன்னிலும் உயர்ந்தது உலகினில் இல்லை!
மறவாதே
உன்னில் தாழ்ந்ததும்.....உலகினில் இல்லை!
இன்னாரைப் போலவாழ வேண்டும் என்பதைவிட
உன்னைப் போலவே நீ வாழவேண்டும்!

பொறுப்பு

நேர்மையேபோதும்.......சிகரத்தில் பறக்க!
கடவுள் பயமேஞானத்தின் தொடக்கம்!
நேர்படப் பேசு.......நெஞ்சில் பட்டதைப் பேசு!
பச்சோந்திஒன்று
இப்படி எழுதி வைத்து மரணித்ததாம்........!
நிறம் மாறும் போட்டியில் மனிதர்களிடம் நான் தோற்றுவிட்டேன்
எனவே
தூக்கில் தொங்குகிறேன்

முடிவு

கோபப் பட்டால்.......தோற்றுப் போவாய்
எனவே
கோபத்திடம் தோற்றுப்போ.....!
உனக்கு என்றைக்குமே ஆபத்தில்லை!
ஏனென்றால்
உனக்கு நீயே ஆபத்து!
உன்னைக் காப்பாற்ற ஒருத்தன் கூட வரமாட்டான்!
ஆனா
கடுப்பேத்த ஒருத்தன் ஒருத்தனா வருவான்!

திரு. ச. தேவச்சந்திரா
(பிரதி அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை குடியரசில் அதிகாரப் பிரிவினை

1978ம் ஆண்டு இலங்கைக் குடியரசு யாப்பில் அதிகாரப் பிரிவு பின்வருமாறு அமைந்துள்ளது. யாப்பின் 1ஆம் அதிகாரம் மக்களின் பூரணஇறைமை பற்றி குறிப்பிடுகிறது இறைமை என்பது அதி உயர் அதிகாரம் ஆகும். இலங்கைக் குடியரசு " அதி உயர் அதிகாரம்" ஆகிய இறைமை மக்களிடமே உள்ளது. இது பராதீனப் படுத்த முடியாது. இந்த இறைமை அதிகாரம் அல்லது உயர் வலு அரசாங்கத்தின் அதிகாரங்கள்,அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகிய 3 அம்சங்களையும் உள்ளடக்கியது.

மக்களின் இவ்வதிகாரம் கூட்டமாக்கல் துறையில் பாராளுமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் மக்களின் பிரதி நிதிகள் ஆவார். மேலும் குடியொப்பம் மூலம் மக்கள் கூட்டமாக்கலில் பங்கு கொள்ள முடியும்.

மக்களின் நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுகிறது. மக்களின் நீதி பரிபாலன அதிகாரம் பாராளுமன்றத்தினூடாக செயற்படுத்தப்படும் நீதி மன்றத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது மக்களின் மனித உரிமைகள் அரசியல் யாப்பினால் வரையறுக்கப்பட்டுள்ளன.

மக்களின் வாக்களிக்கும் உரிமை ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல், குடியொப்பம், மாகாண சபைத் தேர்தல், உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தல் 18 வயதுக்கு மேற்பட்டோரால் பிரயோகிக்கப்பட்டே நிறைவு பெறுகிறது.

மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்துக்கு வகை கூறவேண்டும். அவரே அரசின் தலைவர். அவரே அரசாங்கத்தின் தலைவர். மந்திரி சபையின் தலைவர். உயர் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

பாராளுமன்றத்தைக் கூட்டவோ, கலைக்கவோ ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அதே சமயம் அரசியல் யாப்பு சட்டத்திற்கு அமைவாக ஜனாதிபதியை பதவியிலிருந்து நீக்கக் கோரவும் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களை ஜனாதிபதியே நியமிக்கிறார். எனினும் தக்க காரணமின்றி அவர்களின் பதவிக்காலத்தை குறைக்க முடியாது.

சட்டவாக்க மன்றம் அல்லது பாராளுமன்றம் சட்டங்களை ஆக்க முடியும் எனினும் அமைச்சரவையும் சில சட்டங்களை ஆக்க முடியும் ஜனாதிபதியினால் கலைக்கப்படக் கூடிய பாராளுமன்றத்துக்கு அவரை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரமும் உண்டு

இவ்வாறு இலங்கை அரசியல் யாப்பிலும் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டும் அதே சமயம் அதிகாரம் ஒன்றோடு ஒன்று இணைந்து உள்ளன.

S. Kamshayini
Arts(A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானி ஆன வேலைக்காரி

பிரான்ஸ் நாட்டில் ஆயா ஒருத்தி உலகப்புகழ் பெற்றாள். மறக்க முடியாத மாமனிதர் பட்டியலில் இடம் பெற்றாள். சாதிக்க முடியாத சாதனைகளைச் சாதித்து காட்டினாள். யார் அவள்? மேரி . . . . தெரியவில்லையா? இன்னும் கொஞ்சம் சொன்னால், ஆம் . . ஆம் . . என்று தலையாட்டுவீர்கள்.

பிரான்ஸ் நாட்டில் ஒரு பணக்கார வீட்டில் குழந்தைகளைப் பேணும் (பேபி சிட்டர்) ஆக வேலைக்குச் சேர்ந்தாள் மேரி பதினெட்டு வயது நிரம்பிய பெண். அன்பு ததும்ப தன் பணிகளைப் புரிந்த அவள் மீது அந்த வீட்டின் மூத்த மகனுக்கு காதல் அரும்பியது. அவ்வளவுதான். அந்தப் பையனின் பணக்கார அப்பா நம்மூர் பண்ணையார்கள் பாணியில் ஆடித் தீர்த்துவிட்டார்.

கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கும் அந்தக் குடும்பத்துக்கு மருமகளாய் அடுத்த வீட்டில் சாப்பாட்டுக்குக் கையேந்தும் மேரி எப்படிக்குடியேற முடியும் என்று அவமானப்படுத்தி வீட்டை விட்டு வெளியேற்றினார்.

பாரிஸுக்கு வந்தாள் மேரி தனது நெடுநாள் கனவுகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சிகளைத் தீவிரமாக ஆராயத் தொடங்கினாள். அவமானம் அவளை வீறுகொண்டு எழச்செய்தது சாதிக்கும் வெறி அவளுக்குள் ஊதி ஊதி உலை வைத்தது உலகமே வியக்கும் யுரேனியக் கதிர் வீச்சைக் கண்டறிந்தாள். புற்று நோய்க்கான முறிப்புச் சக்தியை யுரேனியக் கதிர் வீச்சில் கண்டறிந்து முன்வைத்தாள். நோபல் பரிசுபெற்றாள். உலகப் புகழ் பெற்றாள். யார் அவர்? மேடம் மேரிகியூரி அம்மையார்!

உலகில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையும் இவரையே சாரும்.

**சு. தர்ஷிகா**
12 Sci 2020 A/L
Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

நாளை மண்ணில் பூ பூக்கும்
அதற்கு இந்த மழையும் பூமியும் சாட்சி!
நாளை பகலும் இரவும் வரும்
அதற்கு வானமும் பூமியும் சாட்சி!
நாளை மாற்றம் வரும் என்பதற்காக
இந்த உலக மனிதர்கள் சாட்சி!
நாளை உன் வாழ்க்கையில் வெற்றி வரும்
அதற்கு உன் உழைப்பும் முயற்சியும் சாட்சி!

முயற்சி என்பது விதை போல
அதை விதைத்துக் கொண்டே இரு!
முளைத்தால் அது மரம்
இல்லை என்றால் அது
மண்ணிற்கு உரம்!

சிரிப்பு இல்லாத வாழ்க்கை
சிறகு இல்லாத பறவை போல் . . . . !
முயற்சி இல்லாத மனிதன்
உயிரில்லாத உயிரினம் போல . . . . !

**க. ஷபர்னியா**
2020 A/L
Maths



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலயில் உயர்தரம் தொடங்கிய
முதல் நாளில் முதல் வகுப்பில்
கடைசி இருக்கையை தேடி ஓடி
இடம் பிடித்து நிமிர
பக்கத்தில் என்னைப் பார்த்து
சிநேகமாய் சிரித்தாய்
அன்று தான் என் நெஞ்சில் நீ
நண்பி எனும் விதையாய் விழுந்தாய்.

உடனடியாய் மரமாகி பூப்பூப்பாய்
என எதிர்பார்க்கவில்லை நான்
உயிரோடு உயிராகிப் போனாய் நீ
அன்று முதல் உனது நட்பை
நேசிக்கத் தொடங்கினேன்.

குழந்தைப் பேச்சு
கள்ளமற்ற செய்கை
வெள்ளைச் சிரிப்பு
அன்று முதல் இன்று வரை
ரசித்துக் கொண்டேயிருக்கின்றேன்.

உன்னை என்னிடமிருந்து
பிரிக்கப் போகும்
பாடசாலை A/L Day
இதோ வருகிறது
உனக்கு பிறகான நாட்களை
நான் எப்படி சுமப்பேன்?
இறுதி வரை நீ என்னருகில்
இருந்து விடு
மாணவியாகவே
மரணம் வரை வாழ்கிறேன்.

# சகி யே

P.Lithuja
2020 A/L
Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க வைக்கும் சிந்தனை துளிகள்

01. கற்றுக் கொண்டேயிரு சாதிக்காவிட்டாலும்
முட்டாளாய் ஆகமாட்டாய்

02. நீ பேதையென எண்ணாதே ஏனென்றால் - இப்
பாரினில் மேதைகள் போல் நடிப்பவர்களும் உண்டு

03. மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொள்ளாதே
ஏனெனில் அது பூக்களின் மொட்டுக்களை அழிப்பதை விட
கொடுமையானது

04. இறக்கத்தான் பிறந்தோம் அது வரை இரக்கமாக இருப்போம்

05. வெறுப்பது யாராக இருந்தாலும்
நேசிப்பது நீங்களாக இருங்கள்

06. துன்பம் ஒரு மனிதனைக் கொல்வதில்லை துன்பத்தை
பொறுத்துக் கொள்ள இயலாத தன்மையே ஒருவரை கொன்று
விடுகிறது

07. நாம் விரும்புவதை பெற முடியாத பொழுது
இருப்பதைக் கொண்டு மகிழ்வோம்

08. உன் வாழ்வில் முன்னேற முயற்சி செய்
உலகமே உன்னைப் போற்றும்

09. வாழ்வதற்கு பல வழிகள் உண்டு எல்லா வழிகளிலும்
பலன் கிடைக்கும் என எண்ணிடாதே ஒரு வழியில் சென்றிடு

10. குருவுக்கு பணிந்து கற்றிடு குன்றென உயர்ந்து நின்றிடலாம்

S. Rebecca Shiromi
12Arts
2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தறிவு ஜீவன்களில் இருந்து
## மனிதன் கற்க வேண்டியவை

➊ சிங்கத்திடம் இருந்து ஒன்றையும், கொக்கிடம் இருந்து இரண்டையும், கழுதையிடம் இருந்து மூன்றையும், கோழியிடம் இருந்து நான்கையும், காக்கையிடம் இருந்து ஐந்தையும், நாயிடம் இருந்து ஆறு விடயங்களையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

➊ சிங்கம் எந்தவிடயத்தையும் உடனடியாக செய்யாது நன்கு ஆலோசனை செய்த பின்பு முழு மனதுடன் உறுதியாக செயல்படும். கொக்கு ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை காத்து இருக்கும். அதுபோல் அறிவாளி ஒரு காரியத்தை செய்வதற்கு முன் காலம், இடம், தன் ஆற்றல் கூடும் வரை காத்திருந்து செய்வான்.

➊ களைப்புற்றாலும் கழுதை தன் வேலையை தொடர்ந்து செய்யும். வெயில் மழையென்று பாராமல் உழைக்கும். தன் முதலாளிக்கு கட்டுப்பட்டிருக்கும். ஆகிய மூன்றும் கழுதையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

➊ விடியற் காலை எழுதல், தைரியமாக சண்டையிடுதல், அவர் அவருக்கு தேவையானவற்றை பிரித்துக் கொடுத்தல், தனக்குத் தேவையானவற்றை தானே உழைத்து தேடி சம்பாதித்தல் ஆகிய நான்கும் சேவலிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்களாகும்.

➊ மனைவியுடன் சேர்ந்து இருத்தல், தேவையான பொருட்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய ஐந்தையும் காக்கையிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்களாகும்.

➊ கிடைப்பதை உண்டு திருப்தி அடைதல், உணவு கிடைக்காத நேரத்தில் பட்டினி இருத்தல், நன்றாக பசி இருந்தும் கட்டளை வரும் வரை காத்திருத்தல், நல்ல தூக்கத்தில் இருந்தாலும் உடனடியாக எழுந்து செயற்படுதல், முதலாளிக்கு விசுவாசமாக இருத்தல், உருவத்தில் பெரிய மிருகமாக இருந்தாலும் தைரியமாக எதிர்த்தல் ஆகிய ஆறு குணங்களை நாயிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

**தே. கிருஷ்ஷானிகா**
கலைப்பிரிவு-12B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியும் கலை இலக்கியமும்

01. இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது நாவல் -

**அஸன் பேயினுடைய சரித்திம்**

02. இலங்கையின் தமிழ் நாடகத் தந்தை -

**கலையரசு சொர்ணலிங்கம்**

03. முதலில் தமிழ் அகராதியை தொகுத்தவர் -

**நா. கதிரவேற்பிள்ளை**

04. உலகின் முதலாவது தமிழ் புத்தகம் -

**வணக்கம்**

05. தமிழ் சிறுகதை இலக்கிய மேதை -

**புதுமைப்பித்தன்**

06. உலகில் தோன்றிய மொழிகள் -

**6210 (ஆனால் பாவனையில் உள்ளது - 2780)**

07. ஹவாய் மொழியில் உள்ள எழுத்து வடிவங்கள் -

**(13)** H, K, L, M, N, O, P, Q, W, A, E, I, U

08. அதிகமான மொழிகள் பேசப்படும் நாடு -

**பப்புவா நியூகினியா**

09. புத்த மதத் தத்துவங்களை கூறும் தமிழ் இலக்கிய நூல் -

**மணிமேகலை**

10. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி நடைபெற்ற நாடு -

**மலேசியா**

11. தமிழில் சுருக்கெழுத்து முறையை தோற்றுவித்தவர் -

**சீனிவாசராவ்**

12. ஈழத்து முத்தமிழ் முனிவர் -

**சுவாமி விபுலானந்தர்**

13. உலகில் முதலில் தோன்றிய இலக்கியம் -

**இராமாயணம்**

14. நரிக்குறவர் பேசும் மொழி -

**வக்ரிபோலி**

**வீ. வீதுஷா**
12A கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாம் பூச்சிக் கனவுகளோடு
பறந்து திரிந்தோம்.

அழகான
புன்னகைப் பூக்களாக பூத்துக் கொண்டோம்.

சின்னச் சின்னச்
சிட்டுக்களாக கூடிப்பறந்தோம்.

வண்ண வண்ணக்
கனவுகளை விதைத்துக் கொண்டோம்

அர்த்தம் தெரியாத வார்த்தைகளை எழுதி
புதுக்கவிதை என்றோம்.

அர்த்தமில்லாமல் சிரித்து
மௌன வார்த்தைகளால் அழுதுகொண்டோம்.

காதுக்குள் கதைகூறி
இரகசியம் என்றது
இன்பக்கனவுகளாக எனக்குள் இனிக்கின்றது.

## கனாக் காணும் காலம்

J.M. சலோமி
13 விவசாய
விஞ்ஞானம்

---

# உலக பொது அடையாளங்கள்

(i) ஒலிவ் இலைகள் - சமாதானம்
(ii) சிவப்புச் சக்கரம் - வளர்ச்சி
(iii) மஞ்சள் கொடி - தொற்றுநோய்
(iv) சக்கரம் - தர்மம்
(v) சிவப்பு முக்கோணம் - குடும்பக் கட்டுப்பாடு
(vi) செஞ்சிலுவை - மருத்துவ உதவி

**இந்தியா**

தலைநகர் - புதுடில்லி
நாணயம் - ரூபா
தேசிய மிருகம் - புலி
தேசிய மலர் - தாமரை
தேசிய மரம் - ஆலமரம்
தேசிய பறவை - மயில்
உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு.

L. பிரதிக்ஷா
2021 - கலைப்பிரிவு A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

01. ஒருவன் பின்னாலே குத்துவதை விட தடவிக்கொடுப்பதே மேல்

02. குருடன் யார் என்றால் படித்திருந்தும் அறிவீனமாய் நடப்பவனே.

03. தோல்வியில் ஏற்படும் கண்ணீரையும் வெற்றியின் போது ஏற்படும் மனமகிழ்ச்சியையும் ஒன்றாகக் கருதுங்கள்.

04. அடக்கமும் எளிமையும் கல்வியின் சிறப்பு

05. கெட்டவனின் தொடர்பால் கற்றவனுக்கு துன்பம் ஏற்படும்.

06. எதை இழந்தாலும் கல்வியை மாத்திரம் இழந்து விடாதே.

07. ஒருவனை சமூகம் மதிப்பது கல்வியினால் அதேவேளை அவனை அவமதிப்பதும் கல்வி இன்மையினாலேயே.

08. நாம் விரும்புவதை பெறமுடியாத பொழுது நாம் பெற்றிருப்பதை விரும்பவேண்டும்.

09. வாழ்க்கை என்பது பாசி நிறைந்த ஒரு கற்பாறை அதில் பயணம் செய்யும் நீ மிக அவதான்மாக இருப்பது அவசியம்.

10. திறமை எனும் தாயும் உழைப்பு எனும் தந்தையும் பெற்றெடுத்த அன்புக் குழந்தையின் பெயர்: புகழ்.

11. உற்சாகத்துடன் ஒரு வேலையைத் தொடங்கினாலேயே அது பாதி வெற்றி தான்.

12. விளிப்பதற்கே உறக்கம்! வெல்வதற்கே தோழி! எழுவதற்கே வீழ்ச்சி!

**ரா. ரீனுஷா**
A/L 2021 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனைகள்

நாம் வீணே கழிக்கும் ஒவ்வொரு விநாடியும் நம் வாழ்வில் கிடைக்க முடியாத பெரும் செல்வம். *(பேக்கன்)*

தான் மட்டும் புத்திசாலி என்று நினைப்பவன் பெரிய முட்டாள். *(வால்டேன்)*

பொய் பேசுவோரிடமும் தூற்றித் திரிவோரிடமும் தொடர்பு கொள்ளதே. *(ராமானுஜர்)*

ஒருவனுக்கு படிப்படியாக ஒழுக்கத்தை வளர்ப்பதே உண்மையான கல்வி.

*(காந்தி ஜீ)*

தாயின் இதயத்தில் இருந்தே குழந்தையின் கல்வி தொடர்கிறது. *(ஹென்றி பீச்சர்)*

தமது அறிவுத் திறனும், செயற்படு திறனும் வளர்வது அன்பினாலே. *(எமர்சன்)*

எவன் பிறர் நற்செயலைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது. *(ஜேம்ஸ் ஆலன்)*

நல்ல நூல் நிலையம் ஒன்றின் பாதிப்பகுதியை திரட்டினால் தான் ஒரு புத்தகம் எழுதமுடியும். *(ஜான்சன்)*

நீங்கள் அடுத்தவருக்கு நன்மை தேடும்போதே அது உனக்கு கிடைத்து விடும். (பிளேட்டோ)

இறைவனுக்கு அர்ப்பணிக்காத எந்தவேலையும் பயனில்லாதது. *(தந்திரதேவா)*

**உ. சுஜானி**
12A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அறிந்தும் அறியாததுமான சில விடயங்கள்

01. படகு வடிவில் அமைந்த நாடு - இத்தாலி

02. அஜந்தா குகையிலுள்ள குகைகளின் எண்ணிக்கை - 29

03. ஒரு போதும் மலராத பூ - அத்திப்பூ

04. கெட்டுப் போகாத உணவு - தேன்

05. வேர் இல்லாத தாவரம் - இலுப்பை

06. செங்கடல் சிவப்பாகக் காரணம் - அதன் அல்காக்கள்

07. நூலகங்கள் அதிகம் உள்ள நாடு - ரஷ்யா

08. தனக்கென தாய் மொழி இல்லாத நாடு - சுவிற்சலாந்து

09. அதிகம் களைப்பு ஏற்படுவதும், மறதி ஏற்படுவதும் ஏன்?

*சுறுசுறுப்பாக இருக்கவும் சிறந்த புத்திசாலித்தனத்துடன் இருக்கவும் உடற்கலங்களுக்கு சக்தி அவசியமாகும். இதற்கான சக்தியானது Oயினை இரத்தத்தில் உள்ள ஈமோகுளோபின் வழங்குகின்றன. இவை குறைவடைவதால் ஒட்சிசன் விநியோகம், சுவாச செயற்பாடு என்பன உட்பட தேகசெயற்பாடும் 4 மடங்கு மந்தமாகின்றன.*

10. பூச்சியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு - இந்தியா

11. காகங்கள் இல்லாத நாடு - சிங்கப்பூர்

12. இயேசு நாதர் சிலுவையில்அறையப்பட்ட மலை - கல்வாரி மலை

13. பைபிளை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர்
- சிகன் பால்க் ஐயா.

14. உலகிலே அதிகளவு உற்பத்தி செய்யப்படும் பழம் - தக்காளிப்பழம்

**சா. பாத்திமா நுஸ்கா**
A/L 2021 - கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர் இலக்கியமும் தமிழ் மொழி வளர்ச்சியும்

தமிழ் மொழியானது இன்றைய காலச் சூழ் நிலையில் எங்கும் வியாபித்து பரந்துள்ளது என்பதனை பறைசாற்றிக் கொண்டிருப்பவையாக புலம் பெயர் இலக்கியம் காணப்படுகின்றது. இலங்கையில் வாழ்ந்த தமிழர் தங்கள் பிரதேசங்களை விட்டுச் செல்ல பற்பல காரணங்கள் இருந்தன அவர்கள் சென்று புகலிடமாகக் கொண்ட இடங்களிலுள்ள இந்தியா, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, ஜேர்மனி, சுவீஸ், நோர்வே, சுவிடன், டென்மார்க், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இந்த உலக நாடுகளுக்கு படித்து பட்டம் பெறாத ஒரு சிலரும், படித்து பட்டங்கள் பல பெற்றவரும் இலக்கிய ஆர்வமிக்கோரும், இலக்கிய கர்த்தாக்களும் சென்று விட்டனர்.

அறிவியற் சிற்பியான தன்னிகரற்ற பன் மொழிப் புலவரான தவத்திரு தனிநாயக அடிகளார் உருவாக்கிய "தமிழ் கலாசாரம்" என்னும் ஆங்கிலச் சஞ்சிகை உலகத் தமிழர்க்கு தமிழ் உணர்ச்சியை தன்மான உணர்ச்சியை ஏற்படுத்தியது. மலேசியாவில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றியவர்கள் அங்கேயே உலக தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டினை கூட்டி நடத்தியமை இலங்கையிலும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களை விழித்தெழச் செய்தது.

இன்று புலம் பெயர் இலக்கியம் நிதர்சனமான தமிழ் இலக்கியப் பண்பாக வளர்ந்து வருகிறது. பொழுது போக்குக்கு உதவும் சாதகமான புலம் பெயர் இலக்கியங்கள் எழவில்லை. வதிவிடப் பண்பாட்டு பிரச்சினைகள், அகதி வாழ்வின் சிக்கல்கள், விட்டுப்பிரிந்த தாயகம் பற்றிய ஏக்கம், எதிர்காலம் பற்றிய எண்ணம் என்பவற்றை கருப் பொருளாகக் கொண்ட இலக்கியங்களாகஇவை மிளிர்கின்றன. இவ்விலக்கியங்கள் எதிர் கால குழந்தைகளைப்பற்றி பெற்றோர் கொண்ட எதிர்பார்ப்புகள் அச்சங்கள் பற்றியும் கூறி நிற்கின்றன. அண்மையில் பிரான்சில் மறைந்த எஸ். அகஸ்தியர், அவுஸ்ரேலியாவில் வாழும் எஸ். பொன்னுத்துரை மற்றும் முருகபூபதி, சாமி அப்பாத்துரை, வ. ஐ. ச. ஜெயபாலன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான கலை ஈடுபாடு கொண்ட படைப்பாளி தன் படைப்பினூடாக ஏதோ சொல்ல விழைகின்றான் உலக நற்படைப்புக்களினால், தான் பெற்ற தரிசனங்களை ஆத்ம விசாரணைக்கு உட்படுத்தி ஆத்ம விசாரம் செய்து தனக்கே வழக்கமான வடிவமொன்றில் இலக்கியமாக வெளிப்படுத்த முனைகின்றான்.

சாமி அப்பாத்துரை அவர்கள் எழுதிய "தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம்" என்ற நூல் புலம் பெயர்ந்த தமிழ் வாழ்வை ஒரளவு சுட்டி நிற்கின்றது. இவ்வாறான நூல்கள் மட்டுமன்றி ஊடகமும் புலம் பெயர் தமிழரின் தமிழ் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர். அடுத்த கட்டமாக பிரித்தானியாவில் தமிழோசை கேட்டுக் கொண்டே இருப்பது. பிலிப்பைன்ஸ் வானொலியில் புதிதாகக் கேட்கத் தொடங்கியமை பிரித்தானிய " தீபம்" தொலைக்காட்சியும் தமிழ் உணர்வு மேலிட்டால் " தமிழ் பாடசாலைகள் பல இங்கிலாந்தில் இயங்கி வருவதுடன் கலை கலாசாரங்களும் பேணப்பட்டு வருகின்றமையும் இன்றைய சூழ்நிலைகளில் புலம் பெயர் இலக்கியங்களில் தமிழ் மொழி எவ்வாறு வளர்க்கப்படுகின்றது என்பதை இதிலிருந்து அறியலாம்.

L. Yathusha
12A Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனநாயகம்

சனநாயகம் என்பது மக்கள் ஆட்சி அதிகாரம் நேரடியாகவோ அல்லது தமது பிரதிநிதிகள் மூலமோ காலத்துக்குக் காலம் தெரிவு செய்து ஆட்சி செய்யும் முறையாகும்.

இறுதியாக உச்ச அதிகாரம் அல்லது இறைமை அல்லது ஏகாதிபத்தியமாக மக்கள் இருப்பார்களாக இருந்தால் அது சனநாயகம் எனலாம். சனநாயகத்தின் வெற்றிக்கு பொதுவானதாக சமத்துவம், சகோதரத்துவ உணர்வு, அரசு சிறிதாக இருத்தல், அரசியல் சுதந்திரம் ஆகியவை மிக முக்கியமாகும்.

ஒரு சனநாயக நாட்டில் வயது வந்த ஒருவர் வாக்களிப்பதற்கும் தேர்தலில் நிற்பதற்கும் உரித்துடையவர்.

- ☒அங்கு காலத்திற்கு காலம் தேர்தல் நடைபெறும்.
- ☒அங்கு நிருவாகத்திற்கும் நீதி பரிபாலனத்திற்கும் சம வாய்ப்புண்டு
- ☒பேச்சுச் சுதந்திரம், அச்சுச் சுதந்திரம், சங்கங்கள் கூட்டும் சுதந்திரம் உண்டு.

மக்கள் அரசியலில் பங்குபற்றி தமது ஆட்சியாளர்களை காலத்துக்குக் காலம் தெரிந்தெடுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அங்கு அரசியலில் சிறுபான்மையோருக்கும் சம வாய்ப்புண்டு.

அரசியல் சிறுபான்மையோர் மொழி, சமயம், சாதி, பிரதேசம் ஆகியவற்றைக் குறிக்கும். மேற்கூறிய சுதந்திரங்களில் மிக அடிப்படையானவை பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரமாகும். சுதந்திரமாக அரசியலில் விமர்சனம் செய்ய இடமிருக்க வேண்டும்.

இதன் தத்துவம் யாதெனில் மற்றவை மக்களின் ஆளுமையை மதிப்பது, மற்ற மக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது.

காலத்துக்குக் காலம் தேர்தல் நடைபெறுவது சனநாயகத்தின் முக்கியத் தன்மையாகும். மாற்றுக்கட்சிகளை இணைத்து அரசாங்கம் அமைக்கக்கூடிய சூழ்நிலை நிலவ வேண்டும். அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்திருக்குமாயின் அங்கு பயம் பலாத்காரம் சுதந்திரமாக உரையாடும் பலம்,அரசாங்கத்தை மாற்றியமைக்கும் பலம் ஆகியவை காணப்படும். இத்தகைய நிலைமை இல்லையெனின் அங்கு சனநாயகம் இல்லையென்று கூற வேண்டும்.

U. Dilukshi
12A Art's



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கல்வியின் போக்கு

கல் எனும் சொல் கல்வி மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவனது வாழ்க்கையில் வளம் பெறச் செய்கிறது. இத்தகைய கல்வி பற்றி ஆய்வுரீதியாக பல கருத்துக்கள் காலத்திற்குக் காலம் முன்னெடுக்கப்படுகின்றன. இன்றய கல்வி சிந்தனையிலும் புதிய விடயங்கள் இடம் பெற்று வருகின்றன.

இன்றைய கல்வி செயற்பாட்டில் இலங்கையில் மட்டுமின்றி அகில உலக ரீதியாகவும் பாரம்பரியச் சிந்தனைகளின் செல்வாக்கும் தாக்கமும் இன்றளவும் இருந்துதான் வருகிறது. வேகமாக மாறிவரும் உலக ஒழுங்குகளுக்கேற்ப கல்வி செயற்பாடுகளிலும் மாற்றங்கள் தேவை. எதிர்
காலத்தையும் ஈடுசெய்யக்கூடியதாக கல்வி அமைய வேண்டும். இதுதான் புதிய கல்விச் சிந்தனையின் புதிய முக்கிய இலக்கு.

மேலை நாடுகளில் 1ம் துறையான விவசாயம் 2ம் துறையான கைத்தொழில்,
3ம் துறையான சேவைத்துறை என்பனவற்றின் பங்கும் முக்கியத்துவமும் இன்று குறைந்து 4ம் துறையான நவீன தகவல் தொழினுட்பம் செல்வாக்குச் செலுத்துகிறது. 70% மான வேலை வாய்ப்புக்களை இந்த 4ம் துறையே
உருவாக்கி வருகிறது. தொழிலாளிகள், விவசாயிகள் என்ற சொற்கள் வழக்கொழிந்து அறிவு சால் ஊழியர்கள் (Knowledge Worker) என்ற புதிய சமுகத்தின் தோற்றத்தை இன்று அவதானிக்க கூடியதாகவுள்ளது

விரைவாக ஏற்பட்டு வரும் அறிவுப்பெருக்கம் குறிப்பாக விஞ்ஞான தொழினுட்ப அறிவுத்துறையில் துரித கதியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் முறைசார்ந்த, நிறுவன ரீதியான கல்வியை காலாவதியாக்கப்பட போகின்றன.
மனிதனின் அறிவுத்தொகுதியானது காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது இதன்படி கற்றல்வழிமுறைகள் சிறந்த வழிக்கு இட்டுச்செல்லக் கூடியதாக இருக்கவேண்டும்.

நவீன கல்விச் சிந்தனையில் மிக முக்கியமானதாக கருதப்படுவது கற்பதற்கான கற்கும் திறன்களை மேம்படுத்துவதாகும். (Principle of learning to learn) அதாவது பாட உள்ளடக்கம் விடய அறிவு என்பவற்றின் முக்கியமானவை என புதிய கல்வி சிந்தனை வலியுறுத்துகிறது.

S. Kamsika
12A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

அறிவுரை விளக்கெண்ணெய் போன்றது
பிறருக்கு தருவது எளிது நாமே ஏற்றுக்கொள்வது
கடினமாகும்

மனதில் உள்ள அழகுதான் புறத்தில் உள்ள பொருள்களில்
அழகை காண உதவும்

ஆசை உள்ளம் படைத்தவன் விலங்கு. அன்பு உள்ளம் படைத்தவன்
மனிதன். அருள் உள்ளம் படைத்தவன் தேவன்.

மனிதர்களில் மூன்று விதமானவர்கள் உண்டு. மனிதரில் விலங்கு,
மனிதரில் மனிதன், மனிதரில் தேவன்

தனக்கென்று வாழ்பவன் விலங்கு. பாதி தனக்காகவும்
பாதி பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன். பிறருக்காகவே
வாழ்பவன் தேவன்.

பேசுவதை கூடியளவு குறைத்துக் கொள்ளுங்கள் அதனால்
நன்மை உண்டு

குற்றம் காண்பது மிக எளிது ஆனால் குணத்தைக் காண்பது
கடினம்.

S.Kamsika
12A Art's



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால பொது அறிவு – BIOLOGY

01. கலங்களை அளக்கும் அலகு?
Micrometre(μm)

02. சராசரி விலங்குக் கலத்தின் பருமன் யாது?
20μm

03. சராசரி தாவர கலத்தின் பருமன் யாது?
35μm

04. கோழியின் முட்டைக்கலத்தின் பருமன் யாது?
3cm

05. வைரசுகளின் பருமனை அளக்க பயன்படுத்தும் அலகு யாது?
nm (nanometre)

06. மனிதக் கண்ணின் பிரிவலு யாது?
0.1mm

07. இலத்திரனியல் நுனுக்குக்காட்டியின் பிரிவலு யாது?
0.2nm

08. குருதியிலுள்ள முதலுருப்புரதங்களின் நூற்று வீதம் யாது.:.
7%

09. ATP நீர்ப்பகுப்படைந்து ADPயாக மாறுவதனால் வெளிவிடப்படும் சக்தியின் அளவு யாது?
30.6KJ

10. கலவட்ட நிகழ்வுகள் 5 அவத்தைகளாகும் அவை எவை?
- $G_1$ அவத்தை, • S அவத்தை, • $G_2$ அவத்தை
- M- இழையுருப்பிரிவு, • C- குழியவுருப்பிரிவு

11. குருதி முதலுருப் புரதங்களின் 3 வகைகள் எவை?
- அல்புமின், • குளோபியூலின், • பைபிரினோசன்,

12. தாயத்தில் மஞ்சள் நார் கசியிழையம் காணப்படும் பகுதிகள் எவை?
- புறச்செவிச் சோணை, • குரல்வளைமூடி

13. ஒளித்தொகுப்பு இரு பிரதான படிநிலைகள் எவை?
- ஒளித்தாக்கம், • இருள் நிலைத் தாக்கம்

Y. Kithushan
A/L Arts Batch
12B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு உண்டு கால அட்டவணை

நம் உடலுக்கும் கால அட்டவணை உண்டு இதை நாம் முறையாகப் பின்பற்றினால் மருத்துவரிடம் போக வேண்டிய அவசியமே இல்லை. இதோ கால அட்டவணை.

| நேரம் | உடலுறுப்பு | செய்யவேண்டியவை |
|---|---|---|
| விடியற்காலை 3 மணிமுதல் 5மணிவரை | நுரையீரல் நேரம் | இந்த நேரத்தில் மூச்சிப்பயிற்சி தியானம் செய்தால் ஆயுள் நீடிக்கும். |
| காலை 5 மணி முதல் 7மணிவரை | பெருங்குடல் நேரம் | இந்த நேரத்தில் காலை கடன்கள் முடிக்க வேண்டும். இதனால் மலச்சிக்கல் ஏற்படாது. |
| காலை 7 மணி முதல் 9மணிவரை | வயிற்றின் நேரம் | இந்த நேரத்தில் கல்லைச்சாப்பிட்டாலும் நன்கு ஜீரணமாகும். |
| காலை 9 மணி முதல் 11மணிவரை | மண்ணீரல் நேரம் | வயிற்றில் விழும் உணவை செரிக்க செய்யும் நேரம் இந்த நேரத்தில் எதையும் சாப்பிடக்கூடாது. தண்ணீர் கூடக் குடிக்க கூடாது |
| காலை 11 மணி முதல் 1மணிவரை | இதயத்தின் நேரம் | இதயநோயாளிகள் கவனமாக இருக்க வேண்டிய நேரம். சத்தமாக பேசுதல், பயப்படுதல், கோபப்படுதல் அறவே தவிர்க்கவேண்டும். |
| பிற்பகல் 1 மணி முதல் 3மணிவரை | சிறுகுடல் நேரம் | மிதமான சிற்றுண்டியுடன் ஓய்வு எடுக்கவும். |
| 3 மணிமுதல் 5மணிவரை | சிறு நீர்ப் பையின் நேரம் | நீர்க் கழிவுகளை வெளியேற்ற சிறந்த நேரம் |
| 5 மணிமுதல் 7மணிவரை | சிறுநீரகங்களின் நேரம் | தியானம், இறைவழிபாடு செய்வது ஏற்றது |
| 7மணி முதல் 9மணிவரை | பெரிகார்டியத்தின் நேரம் | இது இதயத்தை சுற்றியிருக்கும் ஒரு சவ்வு. இரவு உணவு நேரம். |
| 9மணி முதல் 11மணிவரை | உச்சந்தலை முதல் அடி வயிறு வரை | அமைதியாக உறங்கலாம் |
| 11மணிமுதல் 1மணிவரை | பித்தப்பை நேரம் | அவசியம் உறங்க வேண்டும் |
| 1மணிமுதல் 3மணிவரை | கல்லீரல் நேரம் | இரத்தத்தை கல்லீரல் சுத்தம் செய்யும் நேரம். கட்டாயம் தூங்க வேண்டும் |

S. Jadusun Bio (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக்களும் கூறியவர்களும்

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் - கார்ல் மாக்ஸ்

செய் அல்லது செத்து மடி - மகாத்மா காந்தி

மக்களாட்சி என்பது மக்களால் நடாத்தப்படும் ஆட்சி. மக்களின் மக்களாலான மக்களுக்கான அரசாங்கம் - ஆப்ரகாம் லிங்கன்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் - திருமூலர்

புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் - பாரதிதாசன்

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை - பால கங்காதர திலகர்

தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் - முத்து ராமலிங்க தேரர்

துப்பாக்கி குண்டை காட்டிலும் சக்தி வாய்ந்தது வாக்குச்சீட்டு - ஆப்ரகாம் லிங்கன்

கற்பி, ஒன்றுசேர், புரட்சிசெய் - அம்பேத்கர்

இந்தியா இந்தியர்களுக்கே - தயானந்த சரஸ்வதி

சுதந்திரம் என் பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் - திலகர்

இரத்தத்தை கொடுங்கள் சுதந்திரம் தருகிறேன் - நேதாஜி

மழையிலிருந்து வரும் ஒவ்வொரு துளிநீரையும் கடலுக்குள் வீண்விரயம் செய்யாமல் பயன் படுத்தல் - பராக்கிரமபாகு

ஆயிரம் பூக்கள் மலரட்டும் - மார்ட்டின் லூதர் கிங்

I have a dream எனக் கூறியவர் - மார்ட்டின் லூதர் கிங்

கண்ணுக்கு கண் என்ற சட்டத்தை அமுல்படுத்தினால் முழு உலகமே கருப்பாகி விடும் - மகாத்மா காந்தி

தத்துவஞானிகள் உலகம் பற்றி விளக்கியுள்ளனர் ஆனால் உண்மையான பணி உலகை மாற்றியமைப்பதாகும் - கார்ல் மாக்ஸ்

**பி. வேணுப்பிரகாஷ்**
13 - விஞ்ஞானப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாய்

பத்து மாதம் என்னைச் சுமந்து
உன் உதிரத்தை உணவாய்
எனக்குக் கொடுத்தவள் - நீ உன்
அன்பால் வளர்த்து உலகைக் காட்டினாய்

இன்பத்திலும் துன்பத்திலும்
துவண்டு போகாமல்
நம்பிக்கை, தைரியம் எனும்
வார்த்தையில் வாழ வைத்தாய்
பசியாய் நீ இருந்தாலும்
என் பசியை ஆற்றுவாய்
நோயினால் நான் துவண்டாலும்
தூங்காது உன் உள்ளம்
வைத்தியராய் என் அருகில்

தரணியிலே உறங்கவைக்க நீ
பட்ட வேதனை நான் அறிவேனம்மா
வாழ்க்கை என்னும் வட்டப் பாதையில்
உன் சோகங்கள் துயரங்கள்
எல்லாவற்றையும் " பொறுமை" என்ற
சொல்லில் அடக்கி வைத்தாய் நீ
படும் வேதனை கண்டு தவிக்கின்றேன் - நான் உன்
அருகில் இருக்கின்றேன்.

நான் உறங்கும் போதும்கூட
உன் நிழலில் உறங்குகின்றேன்
உன் அன்பில் நிலைத்து நிற்க - நீ
காட்டிய பாதையில் பயணிக்கின்றேன்
என் துயர் துடைத்த தாயே - நீ
நோயின்றி வாழ நான் இறையருள்
வேண்டுகின்றேன்
இன்று உன் உதிரத்தில் வாழ்கின்றேன்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உன்
மகளாகப் பிறக்க வேண்டும்.

**ச. துர்க்காஜினி**
2020 வர்த்தகப் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவஞானிகளின் தத்துவங்கள்

01. எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்கு தெரியும். ஏனெனில் நான் ஒரு அறிவாளி - சோக்ரடீஸ்

02. ஷஷ உள்ளடக்கத்துடன் வாழ்வதே மிகப்பெரிய செல்வம். நல்லவர்களுக்கு சட்டங்கள் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொறுப்புடன் வாழ்வார்கள். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டங்களை உருவாக்கிக் கொள்வார்கள். - பிளேட்டோ

03. மூலதனம் இறந்த தொழிலாளரைப் போன்றது. இது உயிருள்ள தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சி வாழ்கிறது. - கார்ள் மாக்ஸ்

04. மனிதன் ஒரு மணி நேரத்தை வீணாக்குகின்றான் என்றால் அவன் வாழ்க்கையின் மதிப்பை உணரவில்லை என்று அர்த்தம். - பர்வின்

05. நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது. சேவை மட்டும் செய்ய முடியும். - விவேகானந்தர்

06. அறியாமை என்னும் மாயத்திரைகள் நம்மை விட்டு விலகினால் அருட் பெருஞ் சோதியான ஆண்டவரை நாம் தரிசிக்கலாம் - வள்ளலார்

07. பிராத்தனைகளை விட உயர்ந்தது பொறுமை தான். - புத்தர்

08. கவனமுடன் செயலாற்றுங்கள் நல்ல விஷயங்களில் மட்டும் மனதைத் திருப்புங்கள் - மகாவீரர்

09. நீ பிறரின் குணாதிசயங்களை கவனிக்கத் தொடங்கினால் அவர்பால் அன்பு செலுத்தும் நேரம் இருக்கும். - அன்னை தெரேசா

10. கண்ணெதிரே காணும் ஒவ்வொன்றையும் நம்புவது அபாயமானது அதைக் காட்டிலும் ஒருவரையும் நம்பாதிருப்பது அபாயகரமானது. - ஆபிரகாம் லிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பு மட்டும் அனுமதிக்க வேண்டும் - நெல்சன் மண்டேலா

12. ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படும்.
- விவேகானந்தர்

13. மனிதனின் ஆகப் பெரிய கண்டு பிடிப்பு புத்தகங்களே.
- அல்பார்ட் ஜன்ஸ்டீன்

14. உண்மையான வாசகன் வாசிப்பதை முடிப்பதில்லை.
- ஆசிகார் வைல்ட்

15. ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்ட போது ஒரு நூலகம் கட்டுவேன் என்றார் - மகாத்மா காந்தி

M. Thusharika
2021 A/L Batch
Arts-B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கம்

இளம் விடியல்
நிலவும் தூங்கிப்போகும்
விண்மீன்கள் மட்டும்
கண் சிமிட்டி வேடிக்கை பார்க்கும்.
தூங்காதே நண்பா விழித்திரு.

நட்சத்திரங்கள் எல்லாம்
இராஜகுமாரர்கள் ஆகும்
பூக்கள் எல்லாம்
சப்தமிட்டு மலரும்
அதற்காக வேனும்...........

வெட்கம் கெட்ட நீராவி
காலைத் தென்றலுடன் புணர்ந்ததில்
பிறக்கும் பனித்துளிகளை
அனாதையாய் விட்டோடி விடும்
புற்கள் அதனை
கிரீடங்களாக சூடிக் கொள்ளும்
அதற்காக வேனும் தூங்காதே
நண்பா..........

பனிக்குலம் தேவதை
கண்டதுண்டோ நீ?
பூக்களின் சங்கீதம்
கேட்டதுண்டோ நீ?

கற்களும் இளகிடும்
உணரலாம் நீ
கான்கிரீட் கட்டிடமும்

சுகந்தம் வீசும்
தென்றலும் உன்னுடன் பேசும்
அதற்காக வேனும் தூங்காதே
நண்பா . . . .

வாழ்க்கை சிறியது
இமைகள் மூடி
அதிசயங்கள் காணாமல்
உறக்கத்தில் சொர்க்கம்
தேடாதே தோழா . . . .

ந. டனிசா
2020 Batch Science



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகற்பொழுதின் படிமங்கள்

நிசப்த நீள் துயிலை
நிறுத்தும் குறட்டையொலி
பரந்துள்ள வான்பரப்பை
வட்டமிடும் பறவையினம்
இரவின் பிடி தளர்ந்து
இரவிப் பிடி இறுகி
இளங்காற்றலைகளினால்
இதம் கொள்ளும் இல்லங்கள்
முற்றத்துக் குப்பைகளை
மூலைகளில் ஒதுக்கி
துப்பரவில் முனைப்பாகிச்
செப்பமுற வைப்போரும்
பராட்டா, சப்பாத்தி
தோசை, வடை, அப்பம்
இடியப்பம், வண்டப்பம்
இன்ன பிறத்தின் பண்டம்
விற்பனையில் குறியாகும்
சிற்றுண்டிக் கடைகளுமாய்
காலைக் கடன் முடித்தும்
முடிக்காமலும் தத்தம்
பணிகளுக்குத் தயாராகும்
பல்வேறு தரப்பினருமாய்
வீதிகளில் ஊர்திகளும்
நடைபவனி மாந்தர்களும்
படிப்படியாய் அதிகரித்து
பகல் நோக்கி விரைதலுமாய்
முற்பகலும், நண்பகலும்
சுட்டெரிக்கும் வெயில் சகித்து
மூட்டை சுமப்போரும்
வெட்டைகளில் வதிவோரும்
கட்டுமானப் பணியில்
அறுவடை மீன் பிடியில்
அவிந்து உடல் வெந்துருகும்
அன்றாடக் கூலிகளும்
பல்வேறு சுவைகளிலே
பகலுணவை முடிப்போரும்
தேநீரும் பருகவழி
தேடி விழி கசிவோரும்
குளிரூட்டி அறைகளிலே
கூடிக் குசு குசுத்து
வரும் தேர்தல் தடைகடக்க
வழிதேடும் ஏழைகளின்
தோழர் எனும் மாண்புகளும்
பகற் பொழுதொன்றின்
பல்வேறு படிமங்கள்

S.Jathurshan
2020 A/L Batch
Arts-stream



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லியே நீ வாழ்க

இன மத வேறுபாடின்றி
அனைவரையும் அணைத்திடும்
அன்பு அன்னையாமவள்
எங்கள் உவெஸ்லியே நீ வாழ்க!

வர்ணிக்கத் தூண்டும் பூங்கா
நிழல் தரும் ஆலமரங்கள்
பலரை மேடையேற்றிய மைதானம்
இத்தனை சிறப்புடைய உவெஸ்லியே நீ வாழ்க!

மாற்றுத்திறனாளிகளென புறம்பாக்கிடாமல்
அவர்களையும் சாதனையாளர்களாய் மாற்றி
இப்பாரினில் திகழ வைத்திடும்
எம் உவெஸ்லியே நீ வாழ்க!

இவ்வையகமெங்கிலும்
உம் புகழ் பிரகாசித்திட
நானும் வாழ்த்துகிறேன் ஒரு மாணவியாக
உவெஸ்லியே நீ வாழ்க!

J. Sujeewa
2021A/L Batch
Arts-stream



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 வருட பாடசாலை அழியா கோலங்கள்

கல்முனை மாநகரில் 1883ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றும் பெருமைக்கும் பாராட்டுக்களுக்கும் பிரசித்தி பெற்றுக்காணப்படும் படைப்பே உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆகும். இப்படைப்பானது ஆலவிருட்சங்களால் சூழக் காணப்படும் இயற்கை எழிலைக் கொண்ட ரம்மியமான சூழலில் அமைந்துள்ளது. இப் பாடசாலையின் தலைவரும் ஆலவிருட்சத்தைப் போல இப்பாடசாலையை கட்டிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார். மேலும் வெள்ளைப் புறாக்கள் துள்ளித்திரிவதைப் போல்ஒரு கலவன் பாடசாலையாக மிளிர்ந்து வருகின்றது. இப்படைப்பிலிருந்து இந்த 13 வருடங்களிலும் பெற்ற நினைவுகள் எத்தனை, எத்தனையோ.........

'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்தது.......'

ஆமாம், ஆலமர நிழலில் அமர்ந்து கொண்டு இதமான காற்று வாங்கி, சக பாடிகளுடன் வெட்டிப் பேச்சு பேசிக் கொண்டிருப்பதும், பாட வேலைகளில் வகுப்பறைக்குள் செல்லாமல் ஒழிந்து திரிவதும் இவ்வாறு நண்பர்களுடன் செய்த குறும்புகளும்,ஆசிரியர்களுடன் செய்த சேட்டைகளும், இல்ல விளையாட்டு நேரத்தில் மைதானம் பூராகவும் செய்த பல சேட்டைகள் இவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்தாலே இப்போதும் தேன்போல தித்திக்கின்றது ஆனால் பிரியும் நொடியை நினைத்துப் பார்த்தால் கண்களில் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு கண்ணீர் பொங்கி வழிகிறது.

உண்மைதான்,இந்த 13 வருடங்களிலும் நான் பெற்ற அனுபவங்கள் என் மனத் திரையிலே ஓடிக் கொண்டிருக்கிறது. 13 வருடங்கள் இப்பாடசாலையிலே கற்று 13 வருடத்தின் இறுதியில் பாடசாலையை விட்டு பிரியும் நொடியை நினைத்துப் பார்க்க முடியவில்லை. நண்பர்களை பிரிந்து செல்வதை நினைக்க முடியவில்லை அவர்களுடன் ஒன்றாகக்கூடி பேசுவதைப் போல் ஒரு காலம் இனி எப்போது வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒரு முக்கியமான படைப்பைப் பற்றிக்குறிப்பிடுவது அவசியம் ஆகும். அவர்கள் எமது ஆசான்களே! காரணம், ஒரு தாயானவள் தனது பிள்ளையை 10 மாதம் தனது வயிற்றிலே சுமக்கின்றாள்.ஆனால் எமது ஆசிரியர்கள் தனது மாணவர்களை 13 வருடங்கள் பாடசாலையிலேயே சுமக்கின்றார்கள். ஒரு பாடசாலையில் இருந்து எத்தனையோ வைத்தியர்களும், பொறியியலாளர்கள், மற்றும் கலைஞர்கள் என வெளியாகின்றனர்.

இவர்களை இவ்வாறான நிலைக்கு உருவாக்குவது ஆசிரியர்களே என்பதை யாராலும் மறுக்க முடியாது. இவர்களை அதிசயப் பிறவி என்றே கூறலாம்.ஆகவே, பாடசாலை நினைவுகள் அனைத்தும் மிக உன்னதமான பொற்காலமாகும். அவை காலத்தை வென்ற காவியமாகும். 13 வருடங்கள் பாடசாலையிலே கற்று A/L எனும் பரீட்சையை எதிர் நோக்கி பாடசாலையை விட்டு பிரியும் அனைத்து மாணவர்களும் பாடசாலையின் மறக்க முடியாத நினைவுகளை சுமந்து கொண்டே பாடசாலையை விட்டு பிரிகின்றார்கள் என்பது மட்டுமே உண்மை.

*'மறைந்து போனாலும் மறந்து போகாத*
*நினைவுகள் மட்டுமே சொந்தம்'*

S.Thurshika
13B Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. தாவரவியற் பூங்காக்கள் - பேராதனை, ஹக்கல

02. மிருகக்காட்சி சாலை - தெகிவளை

03. யானைகளின் சரணாலயம் - பின்னவெல

04. பறவைகளின் சரணாலயம் - குமண

05. வன விலங்கு சரணாலயம் - யால, வில்பத்து, உடவள, லபுகல

06. ஒரே ஒரு இயற்கை வனம் - சிங்கராஜவனம்

07. மிக உயரமான நீர் வீழ்ச்சி - பம்பரகந்த

08. மிக நீளமான ஆறு - மகாவலி கங்கை

09. மிக நீளமான குளம் - சேனநாயக்க சமுத்திரம்

10. மிகப் பெரிய கடற் பாதை - வேலணை, புங்குடுதீவு

11. வெந்நீர் ஊற்று ஏழு உள்ள இடம் - கன்னியா

12. தொல் பொருள் அல்லது புராதன பொருட்கள் அதிகம் உள்ள இடம்

- அனுராதபுரம்

13. தெங்கு முக்கோண வலயம் என சிறப்பிக்கப்படும் மாவட்டம் சிலாபம்,குருநாகல், கொழும்பு

14. ஒரேயொரு இயற்கைத துறைமுகம் - திருகோணமலை

15. நாடாளுமன்றம் உள்ள இடம் - ஸ்ரீ ஜெயவர்த்தன புரக்கோட்டை

Y. தவலக்சன்
2021 Art Stream A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. 2014 ம் ஆண்டு (Feb19) தென்னாசியாவில் ஒரு நாட்டின் புதிய பிரதமராக சுசில் கொனரல்லா என்பவர் தெரிவு செய்யப்பட்டார் இவரின் தாயகம் எது?

- நேபாளம்

02. இலங்கையில் டெங்கு நோயின் தாக்கம் அதிகம் உணரப்பட்ட ஆண்டு எது?

- 2010

03. 2012ம் ஆண்டினை ஐக்கிய நாடுகள் சபை எவ் ஆண்டாக பிரகடனப்படுத்தியது?

- சர்வதேச வலுவள ஆண்டு

04. நவீன ஒலிம்பிக்கின் ஞானத்தந்தை என அழைக்கப்படுவர் யார்?

- பியரே டி. கூபேர்க் டிமோரியல்

05. நூறு ஆண்டுகள் நிலைத்திருக்கும் சார்பியல் கோட்பாட்டின் படி பிரபந்தத்தில் எதுவும் ஒளியை விடவேகமாக பயணிக்க முடியாது என நிருபித்து கூறிய அறிஞர் யார்?

- அல்பிரட் ஐன்ஸ்டைன்

06. உலகின் மிக அதிகளவில் சம்ளம் பெறும் பிரதமர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட முதல் நாடு எது?

- சிங்கப்பூர்

07. ஓசோன் படலத்தில் ஏற்படும் துவாரத்தை அளவீடு செய்ய பயன்படுத்தப்படும் அளவு கோல் யாது?

- தொப்ஸின் அளவு கோல்

08. ஐக்கிய நாடுகள் (UNO) அமைதிப்படைக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி கிரண்ட் பேடி ஆவார். இவரின் தாயகம் எது?

- இந்தியா

09. சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதலில் 13.000 ஓட்டங்களை கடந்த முதல் இரு வீரர்கள்.

- சச்சின் டெண்டுல்கர், டிராகுல் டிராவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. 2011ம் ஆண்டு நடைபெற்ற 13வது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் 10வது முறையாகவும் சாம்பியன் கிண்ணத்தை கைப்பற்றிய நாடு எது?

- அவுஸ்திரேலியா

11. ஆண்டு தோறும் யூன்மாதம் முதலாம் திகதி எத்தினமாக கொண்டாடப்படுகின்றது?

- உலக பால் தினமாக

12. உலகில் முதன் முதலாக தேசியக் கொடியை பயன்படுத்திய நாடு எது?

- டென்மார்க்

13. உலகின் முதல் அணுமின் நிலையத்தை திறந்து மாற்று சக்தி வளப் பயன்பாட்டினை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு யாது?

- ரஷ்யா

**ம.மதனிகா**
2021 - கலைப்பிரிவு

## வாழ்க்கை தரும் பாடம்

01. ஒரு முறை பேச இரு முறை யோசி எதுவும் சில காலம் தான்.

02. ஆசைப்படுவதை மறந்துவிடு ஆனால் ஆசைப்பட்டதை மறந்து விடாதே.

03. வெற்றி எல்லோருக்கும் கிடைப்பதில்லை ஆனால் வெற்றி பெறக்கூடிய தகுதி எல்லோருக்கும் உண்டு.

04. உன்னை யாராலும் தோற்கடிக்க முடியாது உன் நம்பிக்கையில் நீ தோற்கும் வரை.

05. சுமைகளைக் கண்டு துவண்டு விடாதே உலகத்தினரையே தாங்கும் பூமியே உன் காலடியில் தான் இருக்கிறது.

06. சிந்தனை செய். செய்ய நினைப்பதை செய்.

07. யாரையும் நம்பாதே! உன்னை மட்டும் நம்பு

08. விழாமல் வாழ்ந்தேன் என்பது பெருமை அல்ல. விழுந்தாலும் எழுந்தேன் என்பதே பெருமை.

09. வாழ்வது ஒரே ஒரு முறை அதை உனக்காக வாழ்.

**S.பிரபிந்**
Maths -(2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிர்க்கும் பொம்மை

காலைப்பொழுது இருள் மர்மங்கள் மறைந்து போகும் பொழுது! விமலின் கண்கள் பதற்றத்துடன் அலைபாய்ந்து கொண்டிருந்தன. வழக்கமாக அவன் கட்டிலின் அருகில் இருக்கும் மேசையில்தான் மோட்டார் வண்டியின் சாவியை வைப்பான். ஆனால் இன்றோ அவ்விடத்தில் சாவியைக் காணவில்லை. மனைவியை அழைத்தான். வழக்கமாக வீட்டில் காணாமல் போகும் பொருட்களை தனது துப்பறியும் திறனால் ஒரு சில நிமிடங்களில் கண்டு பிடித்து விடும் ஆற்றல் அவன் மனைவி கோமளவல்லியிடம் இருந்தது. அவளோ அடுக்களைக்குள் இருந்தபடி தன் குரலை மட்டுமே வெளியே அனுப்பினாள். " அங்கதான் எங்கயாச்சும் வெச்சிருப்பயள். கொஞ்சம் நல்லாத் தேடிப் பாருங்க நான் இங்க கொஞ்சம் வேலையா இருக்கன்."

வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே மீண்டும் தேடுதல் வேட்டையில் இறங்கினான். தன் அறையில் தேடிவிட்டு மகனின் அறைக்குள் நுழைந்தான். அங்கும் இல்லாமற் போகவே வெளியேற முற்பட்டபோது கட்டிலின் கால் விமலின் காலைப் பதம்பார்த்து விட்டது. காலைத் தடவுவதற்காக குனிந்தவனின் பார்வை கட்டிலின் அடியில் சென்றது. கட்டிலின் அடிப்பகுதி இருள் குவிந்து கிடந்தது. இருண்ட பகுதி அநேகமாக மர்மங்கள் நிறைந்த இடம்தான். அவனது கைப்பேசியின் டோர்ச்லைட் அம் மர்மப்பகுதிக்குள் ஊடுருவியதும் அங்கு எதையோ கண்டுபிடித்தவன்போல் தும்புத்தடியை உள்ளே விட்டு வாரி வெளியில் எடுத்தான். பேனா மூடிகள், முடிசிக்குண்ட சீப்பு, மங்கிய கீசெயின், பட்டரிகள், கணித புத்தகம் எனப் பலதுகளும் தங்களுக்கான தொலைந்துபோன கதைகளுடன் முகம் காட்டின. அத்துடன் இன்னும் ஒன்றும் இருந்தது. அது ஒரு பொம்மை அதன் தலை பிடுங்கப்பட்டிருந்தது ஒரு முண்டமாக புழுதியேறிக்கிடந்தது. மூன்று வருடங்களிற்கு முன் திருவிழாவில் மகன் ஜெய் அடம்பிடித்துக் கேட்க வாங்கிக் கொடுத்த பொம்மையது. அது அவனுள் ஏதோ செய்வதாக உணர்ந்தான். அதனைத் துடைத்தபடி ஒரு நொடி கண்களை மூடினான் மீண்டும் திறந்தபோது தலையற்ற அந்த பொம்மையில் தன் தலையிருப்பதான ஒரு பிரமை தோன்றி மறைந்தது. திடுக்குற்று மீண்டான் பின்பு அதனை தூக்கிக் கொண்டு வரவேற்பு அறைக்குள் வந்தான் அங்கிருந்த சோபாவின் முன் இருந்த மேசையில் வைத்தான். அவ்வறைத் தொங்கலில் வைக்கப்பட்டிருந்த கணிணி விளையாட்டில் ஜெய் பிஸியாக இருந்தான். சோபாவில் சாய்ந்த விமலின் நினைவுகள் பொம்மையைச் சுற்றி சுழன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பொம்மையை வாங்கிய நாளிலிருந்து ஜெய் அந்த பொம்மையுடனே சாப்பிடுவான், விளையாடுவான், வெளியில் செல்லும் போது அதனைத் தன் அணைப்பிலேயே வைத்திருப்பான். தூக்க நேரத்தில் பொம்மைக்கு கதைகள் பல சொல்வான். சிறுவரின் உலகில் பொம்மைகளும் உயிர்பெற்று வருகின்றன. இப்பொழுது ஜெய் வளர்ந்து விட்டான். அவனுக்கு பதினொரு வயதாகின்றது. அவன் இப்பொழுதெல்லாம் இது போன்ற பொம்மைகளுடன் விளையாடுவதில்லை. வயதாக ஆக தமக்கு நெருக்கமாகவிருந்த பல விடயங்கள் பழசாகின்றன இவ்வளவு எளிதாகவா கைவிட்டு விடுவார்கள்? என்ற கேள்வி விமலின் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

"சாவிய எடுத்திங்களா?" மனைவியின் குரல் கேள்வியிலிருந்து அவன் மனதை மீட்டது. இன்னும் இல்லையென தலையசைத்தான். தங்களின் அறையினுள் நுழைந்தவள் மறுநொடி கையில் சாவியுடன் தோன்றினாள். மனைவியின் துப்பறியுந் திறன் அவனுக்குப் புதிராவே இருந்தது.

மோட்டார் வண்டியில் சாவியை நுழைத்து வீட்டிலிருந்து எங்கோ பறந்தவன் மாலை 5 மணியளவில் வீடு வந்து சேர்ந்தான். நேராக வந்து சோபாவில்தான் அமர்ந்தான். காலையில் வைத்த பொம்மையின் நினைவு வந்தது. அவன் முன்னாலிருந்த மேசை நன்கு துடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததும் பொம்மை பற்றி மனைவியிடம் கேட்டான். அவள் தெரியாது என்றாள் மகனிடம் கேட்டான் "அந்தத் தலையில்லாத முண்டந்தானே! எனக்குத் தெரியா" என்றான் இவன்தான் ஏதோ செய்திருக்கிறான் என ஊகித்துக் கொண்டே விமல் அதனைத் தேடி குப்பைத் தொட்டியிருக்கும் கொல்லைப் பக்கமாகச் சென்றான். அங்கே . . . மலர்ச்சாடிகளின் வரிசையில் அந்த பொம்மையும் நின்றிருந்தது பொம்மைக்குப் புதிய தலையும் கிடைத்திருந்தது. அப்பொம்மையினுள் மண் நிரப்பப்பட்டு ஒரு செடி அதன் புதிய தலையாக துளிர்திருந்ததனைக் காண நேர்ந்த விமலின் மனதில், தன் மகனுடனான உறவும் வலுவாய் துளிர்த்துப் படர்ந்தது.

Ma. Aaqila
Arts
2021A/L Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது அரக்கர்களின் சாம்ராஜ்ஜியம்

அரக்க வலையில்
ஆயுள் கைதிகளாக
மனிதத்தைத் தொலைத்து விட்டு
எரிந்து கொண்டிருக்கும்
கறுப்பு பொழுதுகளுக்குள்
கரைகிறது உயிர்கள்

அரக்க பாதங்கள் அடியில்
நசுங்கித்துடிக்கும்
ஆத்மாக்கள் நாங்கள்

சொர்க்கமென்றழைக்கும்
அசுர வசனங்களை நேசிக்கும்
நாகரிகப்பேய்கள்
எம்முள்

போதை என்ற அரக்கனின்
மின்சார வலைகள் நாலு திசைகளிலும்
பொறிகளாக்கப்பட்டு
காத்துக் கிடக்கிறது
உயிர்களை நசுக்கிக்குடிப்பதற்காக

அரக்க சாம்ராஜ்ஜியத்தில்
அடிமைகளாக கிடக்கும்
எம் சகோதரர்களை மீட்டெடுப்போம்

**றிஸ்மி மஜீத்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரி முதல்வர் பற்றி . . .

முற்றாய் உயர்ச்சிக்காய் முழுவதுமாய் அர்ப்பணித்த கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையானது, வரலாற்றுச் சிறப்புக்கள் பல கொண்டு கிழக்கிலங்கையில் தலை சிறந்த பாடசாலைகளுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒவ்வொருகால கட்டங்களிலும் சிறந்த தலைமைத்துவத்தோடு இயங்கிய அதிபர்களே காரணமாக இருந்தார்கள் என்பதில் ஐயமேதுமில்லை. அந்தவகையில் கடந்த பத்து ஆண்டுகளாக அதிபராகக் கடமை புரிந்துவருகின்ற திரு. வ. பிரபாகரன் அவர்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக விளங்குகின்றது.

2009 ஆம் ஆண்டு திரு. முருகையா அவர்களிடம் இருந்து பாடசாலைப் பொறுப்பைப் பெற்றுக் கொண்ட பிரபாகரன் அவர்கள் பலத்த சவால்களையும் எதிர்கொண்டு பத்து வருடங்களுக்குள் இப்பாடசாலையை சிறந்தவகையில் உயர்த்திவிட்டிருக்கின்றார். பாடவிதானம், இணைப்பாடவிதானம் என்பவற்றில் இந்த தசாப்த காலத்தில் பல முன்னேற்றகரமான சாதனைகளை எமது பாடசாலை சாதித்திருக்கின்றது.

பாடவிதானத்தைப் பொறுத்தவரையில் இவரது காலப்பகுதியில் அதிகமான மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி உள்ளனர். மருத்துவப் பீடத்திற்கு 08 மாணவர்களும், பொறியியல் பீடத்திற்கு 05 மாணவர்களும், சட்டபீடத்திற்கு 02 மாணவர்களும் தெரிவாகிச் சென்றதோடு ஏனைய கலை, வர்த்தக, விஞ்ஞான பீடங்களுக்கு 90 க்கும் மேற்பட்டமாணவர்கள் தெரிவாகிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு கல்வியியல் கல்லூரிகளிற்கும் பெருந்தொகையான மாணவர்கள் வருடந்தோறும் தெரிவாகிச் சென்றுள்ளமையினையும் குறிப்பிட்டேயாகவேண்டும். மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையிலும் கூடுதலான மாணவர்கள் 9அதிதிறமைச் சித்திகளைப் பெற்றுக் கொணடதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகளவான மாணவர்கள் சித்தியெய்தியதும் இவரது காலத்திலேயே ஆகும்.

இணைப் பாடவிதானத்துறையைப் பொறுத்தவரையில் தேசிய மட்டம் வரைக்கும் பங்குபற்றிப் பல வெற்றிகளையும் ஈட்டியுள்ளனர் எமது மாணவர்கள். ஆங்கிலதினப் போட்டியில் சொல்வதெழுதல் போட்டியில் பங்கு கொண்டு இரண்டு தடவைகள் தங்கப்பதக்கத்தையும் ஒரு தடைவை வெண்கலப் பதக்கத்தையும் வெற்றிகொண்டார் கு. வியுக்சனா என்ற மாணவி. அவ்வாறே விளையாட்டுப் போட்டிகளிலும் அதிகமான மாணவர்கள் தேசியரீதியில் பங்குகொண்டு பல சாதனைகளையும் பதக்கங்களையும் வென்றுள்ளனர். மேலும் தமிழ்தினப் போட்டிகளிலும் மாகாணமட்டம் தேசியமட்டங்கள் எனத் தெரிவாகி வெற்றியீட்டியுள்ளனர். இது தவிர சிங்களதினப் போட்டிகளிலும் பங்குகொண்டு பல பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

பாடசாலையின் சிறந்த செயற்பாட்டிற்கு விசுவாசத்தோடும். கடமை உணர்வோடும். அர்ப்பணிப்போடும். யாவரும் ஒரே குடும்பத்தவர் என்ற நினைவோடும் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களின் மேலான செயற்பாடுகளும் இங்கு குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஓர் விடயம் ஆகும்,அதிபரின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு உரிய விடயங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் சிறந்தவர்களாக இருக்கின்றனர். இவர்களை இவ்வாறு செயற் படவைப்பது. எமது அதிபரின் ஆளுமையையே பறைசாற்றி நிற்கின்றது.

எமது பாடசாலை மாணவர்களுடன் அதிபர் அவர்கள் கொண்டுள்ள உறவானது மிகவும் சிறந்ததாகும். பாடசாலையில் கல்விகற்கும் ஒவ்வொரு மாணவரையும் தமது சொந்தப்பிள்ளை போன்று மிகவும் அக்கறையுடனும் சிரத்தையுடனும் நடாத்துபவர். ஒவ்வொரு மாணவர்களினதும் தனிப்பட்ட விபரங்களையும் தெளிவாக ஞாபகத்தில் பதிந்து வைத்திருக்கிறார், யார் பற்றிக் கூறுகையிலும் அவர்களின் சுயபுராணத்தை அப்படியே ஒப்பிவித்து விடுவார். இதனைக் கண்டு நான் மாத்திரமல்ல பல ஆசிரியர்களும் வியப்படைந்து கூறுவதுண்டு, இவ்வாறான ஓர் தனித்துவம் மிக்க அதிபராகவே இவர் இருந்துவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தலைமைத்துவம். நேர்மை. அன்பு. உதவும் மனப்பான்மை எனப்பல பண்புகளைக் கொண்ட அதிபர் அவர்கள் சிறந்த நிருவாகியாகவும். நல்லதொரு ஆன்மீகவாதியாகவும். சிறந்ததொரு மேடைப்பேச்சாளராகவும் நகைச்சுவைமிகுந்தவராகவும் ஆடம்பரத்தன்மையற்ற எளிமைப்பண்பு கொண்டவராகவும் வெற்றியைக் கண்டு மமதை கொள்ளாதவராகவும் தோல்வியைக் கண்டு துவண்டு போகாதவராகவும் தனது பணியைச் செவ்வனே ஆற்றிக் கொண்டு இருக்கின்றார். இவ்வாறான ஓர் அதிபருடன் கீழ் சேவைசெய்யக் கிடைத்தமையினையிட்டு நான் மாத்திரமல்ல எமது பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் பாக்கியம் செய்தவர்களாகவே இருக்கின்றோம். இருப்பினும் இவ்வாண்டு அதிபர் அவர்கள் தனது சேவையினை நிறைவு செய்து ஓய்வுபெற இருக்கின்றார். இவர் நீண்ட ஆயுளுடனும் நிறைந்த சௌபாக்கியத்துடனும் வாழ இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

**திருமதி. இரத்தினப்பிரியா அல்லிஸ்**
ஆசிரியை - உவெஸ்லி உயர்தர
பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இம் மலராக்கத்திற்கு உதவியவர்களுக்கும்,

ஒப்புநோக்கியவர்களுக்கும்,

விழாவில் கலந்து சிறப்பித்த அதிதிகள்,

அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள்,

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,

மாணவர்கள், பெற்றோர்கள்,

பிரமுகர்கள், மற்றும் எமது மாணவர்களுக்கும்

மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.


| | |
|---|---|
| சஞ்சிகை | A/L தினமலர் (கண்ணோட்டம்) |
| வெளியீடு | கமு/கமு உவெஸ்லி உயர்தர பாடசாலை |
| பதிப்பு | ஜூலை 2019 |
| தகவல் ஒழுங்கமைப்பு | திருமதி. பொ. ருத்ரா (பகுதித்தலைவர்) |
| அச்சுப்பதிப்பு | விக்டரி அச்சகம், கல்முனை. |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம், கல்முனை. 0771597347